டூட்டிங் முத்துமாரி அம்மன் கோவிலில்
ஆறு கால பூஜையும் வழமைபோல் நடந்து வருகிறது

47

May 2007

# தமிழர் தகவல்

இலண்டன்

Tamils' Information

தீபம் தொலைக்காட்சி
8வது ஆண்டு நிறைவை
நோக்கி செல்வதையொட்டி
அதிரடி மலிவு விற்பனை
Card : £ 60 மட்டுமே



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest



DIAMONDS
PALACE
76 Tooting High Street
London SW17 ORN
Tel : 020 8767 5333
Fax : 020 8767 5814
MITHUS
JEWELLERY
322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792
BEST FOOD
Supermarket
259 - 261, London Road
West Croydon
Surrey CRO 2RL
Tel : 020 8684 6269
Fax : 020 8686 4577
249 Northolt Road
Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933
364 - 366, Bath Road
Hounslow
Middlesex TW4 7KT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323
இந்த மூன்று இடங்களை தவிர எங்களுக்கு
வேறு எங்கும் கிளைகள் கிடையாது

# தமிழர் தகவல் Tamils' Information

திருவள்ளுவர் ஆண்டு 2037
சர்வஜித்து - ஆனி

மலர் : 04

இதழ் : 48
ஜூன் 2007


" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." - குறள்

## ஐந்தில் வளையாதது...

நான்கு ஆண்டுகளை முழுமையாக நிறைவு செய்து, உங்களின் அன்பான ஆதரவோடு, தமிழர் தகவல் ஐந்தாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது.

புலம்பெயர்ந்த ஒரு தேசத்தில், நம்முடைய மொழி, இனம் ஆகியவற்றின் பண்பாட்டு வெளிப்பாடாய் ஓர் இதழை வெளிக்கொண்டு வருவதில் உள்ள இடர்களையும், தடைகளையும் நீங்கள் நன்றாகவே அறிவீர்கள். அதிலும் ஓர் இதழ் கூட விடுபடாமல் நான்கு ஆண்டுகள் நம் இதழ்ப் பயணம் நடந்திருக்கிறது என்பது எங்களுக்குப் பெரு மகிழ்வைத் தருகிறது.

பொழுதுபோக்கு இதழ்களையும், வம்பு வளர்க்கும் இதழ்களையும் சற்று எளிதாக நடத்திவிடலாம். ஆனால் எல்லாத்துறைகளிலும் புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு நல்ல தகவல்களைத் தரத்தக்க வகையில் இதழ் நடத்துவது எளிதன்று. எத்தனையோ தடைகள், பொருளாதார சிக்கல்கள், சட்டப் பிரச்சினைகள் அனைத்தையும் தாண்டியே நாம் ஐந்தாவது ஆண்டிற்கு வந்திருக்கிறோம்.

வாசகர்களாகிய உங்களின் படைப்புகள், விமர்சனங்கள், குறுக்கீடுகள் என்று பல்வேறு தளத்திலும் உங்களின் பங்களிப்பு இருந்ததால், ஒருவழிப் பாதையாக இல்லாமல், பகிர்தலாகவே நம் பணி தொடர்கிறது. இந்நிலை என்றும் தொடர வேண்டும் என்பது எங்களின் விருப்பமும் வேண்டுகோளும் ஆகும்.

இனிவரும் இதழ்களில், புகழ் பெற்றவர்களின் நேர்காணல்கள், பயணக்கட்டுரைகள், புதிய படைப்பிலக்கிய வகைகள் ஆகியவை இடம்பெறும். மரபுகளில் கால்பதித்து, புதுமைகளில் கிளைவிரிக்க வேண்டும் என்பதே எப்போதும் நம் நோக்கம்.

நம் கருத்துகளிலும், அவற்றை வெளிப்படுத்தும் முறைகளிலும் எப்போதும் நாம் சமரசம் செய்துகொண்டதில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். இனியும் அந்நிலையில் நாம் உறுதியாக நடைபோடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். தொடக்க காலமான முதல் ஐந்தாண்டுகளிலேயே வளைந்து கொடுக்காத நாம் வரும் ஆண்டுகளில் அத்தகைய நிர்ப்பந்தங்களுக்கு ஒருநாளும் ஆளாக மாட்டோம். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதுதானே.

பதிப்பாசிரியர்


முகவரி :
41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 3320

Email :
tamilarthakaval@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

கணினி, அச்சுப்பதிப்பு :
தமிழர் தகவல்

Computering & Printing :
Thamizhar Thagaval



படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே ! தமிழர்களுடன் தமிழில் பேசுங்கள்

வாசகர்களே ! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள் !

# வந்தபின் வென்றவர் வரிசை...



இந்தப் பந்தியில் மூன்றாவதாகப் பேசப்படும் தெரிவு – லண்டனுக்கு வந்து தன்னை நிலைநாட்டிக் கொண்ட திரு வீரசிங்கம் தவமுருகநாதன் பற்றியது.

திரு தவமுருகநாதன் ஈழத்தில் புங்குடுதீவு கிராமத்தில் பத்தாம் வட்டாரத்தில் வியாபாரக் குடும்பத்தில் திரு வீரசிங்கம் தம்பதிகளின் ஒன்பதாவது குழந்தையாகப் பிறந்தவர்.

புங்குடுதீவில் ஆரம்பக் கல்வியையும் பின்னர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் உயர்கல்வியையும் பயின்றபின்பாக மேற்படிப்புக்காக லண்டன் வந்தார். அந்தக்காலத்தில் - 83க்கு முன்னர் - இங்கு கல்விகற்க வந்து தங்கிவிட்டவர்கள் பலர். இங்கு படிப்பின் பின்பாக பெற்றோல் நிலையம் நடாத்தி முன்னேறியவர், லண்டனில் நகைக்கடைகள் அதிகமாக உள்ள வெம்பிளியில் தாரணி நகைமாளிகையை உருவாக்கி, அதன் உரிமையாளராக இருக்கின்றார். வெம்பிளிப் பகுதியில் மிகப் பெரிய நகைக்கடைகள் பல உள்ளன. இந்த இடத்தில் நகைக்கடையை நிறுவியதே இவரின் துணிவிற்கும் திறமைக்கும் சான்றாகும்.

தான் கல்விபயின்ற தெல்லிப்பளை – மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாகக் குழுவில் உறுப்பினராக இருப்பதுடன் பாடசாலையின் வளர்ச்சிக்காக நண்பர்களுடன் இணைந்து உழைப்பதையும் காண முடிகிறது.

லண்டனில் பல நகைக் கடைகள் இருந்தாலும் விளம்பரம் இல்லாத கடையாகவும் விளம்பரத்தை விரும்பாத முதலாளியாகவும் இருப்பது வியப்புக்குரியது. ஆனாலும் தமிழர் தகவலுக்குத் தொடர்ந்து விளம்பரம் தருவதன் இரகசியம் என்ன என்பதை நான் கவனித்தபோது – விளப்பரம் செய்வது இவரின் நோக்கமாக இருக்கவில்லை என்பது எனக்குப் புரிகின்றது. தமிழர் தகவலின் ஆசிரிய தலையங்கத்தை வாசித்தவுடன் அது பற்றிய தனது கருத்தை தொடர்ந்து 47 மாதங்களாகச் சொல்லி வரும் வித்தியாசமான முதலாளி. இப்படியான ஒரு வாசகரை லண்டன் தமிழர் மத்தியில் காணவில்லை.

லண்டன் வந்ததன் பின்பாக தனது மைத்துனியைத் திருமணம் புரிந்த திரு தவமுருகநாதன் இரண்டு பெண்குழந்தைகளின் தந்தை. இவரின் ஒரு மகள் வைத்தியத் துறையில் கல்வி பயில்கின்றார்.

தமிழர் தகவல் இவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. காரணம் இவரின் தமிழ் அறிவு.

– நா சி

உங்கள் உறவுகளுக்கு உலகின் எப்பாகத்துக்கும்
பணமாற்றீடு செய்ய சிறந்த நிறுவனம்



# ABBY EXCHANGE LIMITED

928 Garratt lane, Tooting Broadway London SW17 0ND
Tel : 020 8672 0266 / 8672 7743 Fax : 020 8488 3114


ஜூன் 18 முதல் எங்கள்
புதிய தலைமை செயலகம்
**125 Mitcham Road**
**Tooting, SW17 9EPE**
என்ற இடத்துக்கு மாற்றப்படுகிறது
**Smith Brothers**க்கு அருகில்

**இரண்டாவது கிளை**

367, London Road,
Croydon, CR0 3PB
Tel : 0208 6897555

தொடர்புகட்கு **M SRI**

## விடுமுறையை கழிக்க
## சென்னைக்கு போறீங்களா ?



வசதியாக
குடும்பத்தோடு தங்க
Non A/c Flatகள்
A/c Flatகள்
திருமணத்தை
நடாத்துவதற்கான
ஏற்பாடுகள்
வாகன வசதிகள்
அனைத்துக்கும்

**07801227110**

# இருள் விரிவு

கருணாகரன்

பூக்கள் உதிர்ந்து
காற்றில் சருகுகள் பறக்கின்றன
குழந்தைகள்
ஊஞ்சல்களை இழந்தார்கள்
வானம் நட்சத்திரங்களை இழந்தது
தென்னைகளை வருடமுடியாத காற்று
சுடுகாட்டின் சாம்பலை
அள்ளிவீசுகிறது
அகதிக்காலங்களைத் தள்ளமுடியாமல்
மாய்ந்து கொண்டிருக்கிறேன் நான்
கிரீச்சிடும் சைக்கிள்களில்
முதியவர்களைப்போல சோம்பிவளைந்தபடி
இளந்தாரிகள் போகிறார்கள்.
செம்புழுதி படிந்த தலைகள் வரண்டிருக்கின்றன
பயணிக்கும் தூரமோ
வெகு தொலைவென்று
அந்த முகங்கள் பிரதிபலித்தன
சைக்கிள்களோ தெருக்குழிகளில்
விழுந்தெழும்பித் தடுமாறிக்கொண்டிருக்கின்றன.

போரின் தழும்புகளிலிருந்து
கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது
முற்றங்களை இழந்த வீடுகளுக்கு
கதவுகளில்லை
வீட்டினுள் பண்டங்களுமில்லை
துயரமோ நிரம்பியிருக்கிறது
தீயாய் பெருகிக் கொண்டிருக்கிறது பசி
கேட்டுக் கொண்டேயிருக்கிறது பசி
கேட்டுக் கொண்டேயிருக்கிறது புலம்பல்
உறங்கமுடியாதிருக்கின்றன மனங்கள்.

---

பூக்கள் உதிர்ந்திருந்தன
குழந்தைகளை இழந்த பொம்மைகள்
தவித்துக் கொண்டிருந்தன

பனைகளில் வளர்ந்த காற்று
என்னை உதைத்துத் தள்ளியது.
நூறாயிரம் வருஷங்கள் வேர்கொண்ட
அன்புள மனிதரின் மிஞ்சிய காலடிகளை
அள்ளிச் செல்லாதே என்னருமைக் காற்றே
என்றிரையும் பனைகளின் குரலைக்
கேட்டதிர்ந்தேன்.
வண்ணத்துப்பூச்சி யாத்திரீகர்கள்



மாதமிரு திருக்குறள் கற்போம்

## பெரியாரைப் பிழையாமை

*ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்*
*போற்றலு ளெல்லாம் தலை.* (குறள் : 891)

எடுத்த செயலை முடிக்க வல்லவருடைய ஆற்றலை இகழாதிருத்தல், தம்மைக் காத்துக்கொள்ளும் காவல்களில் எல்லாவற்றிலும் சிறந்தது.

*பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்*
*பேரா இடும்பை தரும்.* ( குறள் : 892)

ஆற்றல் மிகுந்த பெரியாரை மதிக்காமல் நடந்தால், அப்பெரியாரால் நீங்காத துன்பம் உண்டாகும்.

# BEST FOOD

## 4வது கிளை மிக விரைவில்

## வெம்பிளியில்

உங்கள் சகல தேவைகளையும்
பூர்த்தி செய்யும் விதமாக

249 Northolt Road
Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933

259 - 261, London Road
West Croydon
Surrey CRO 2RL
Tel : 020 8684 6269
Fax : 684 4677

VAANI
தயாரிப்புகள்
எங்கள் நேரடி
விற்பனையில்

364 - 366, Bath Road
Hounslow
Middlesex TW4 7KT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323

நாங்களே இறக்குமதி செய்து நேரடியாக உங்களுக்கு தருகிறோம்.

இந்த நான்கு இடங்களைத் தவிர வேறு கிளைகள் எங்களுக்கு கிடையாது

# பாவனையாளர் பக்கம்





சுருதிப் பெட்டி

**£ 35**

**22"** மிருதங்கம்

**£ 95**



## ஏகாந்த வீணை

**சித்திர வேலைப்பாடுடன்**

**கூடியது**

**£ 450**

**சாதாரண வீணை**

**£ 250**

வீட்டில் லட்சுமி
கடாட்சம் பெருக பூ உருளி

**£ 30, £ 40**

**£ 50**



பதிவு செய்துதான்
பெற்றுக்கொள்ள
வேண்டும்
வியாபார தொடர்புகளுக்கு

**020 8480 3320**



**மின்சாரம் மிச்சம்**

**கேஸ் மிச்சம் நேரம் மிச்சம்**

**எதையும் சுலபமாக**

**வேகவைக்க**

**Pressure Cooker**

**12 litre**

**£ 35**

# ARM ASSOCIATES

*For all types of insurance*

We have been helping our client to find competitive and quality policies for over 35 years. How have we been able to stay in the insurance business for so long? Well that is quite simple. We understand our clients and provide them with the personal service they need.

- ✓ We deal with all types of insurance under one roof
- ✓ There are no proposal forms to complete
- ✓ Quotations and cover provided over the phone
- ✓ We are able to offer exclusive rates
- ✓ We also offer Independent financial advice on:

Pensions

- Mortgages
- Life cover
- Investments
- Savings
- Inheritance Tax Planning

ARM Associates is the one stop of all your Financial needs

**P. SRINIVASAN** (CertPFS)
and
**SUHAN SRINIVASAN** (DipPFS, Economics BSc)

**Tel : 020 8763 2221**
Fax : 020 8763 2220
Address : 32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH
Email : sri@srinivasan.co.uk Web : www.srinivasan.co.uk

# வலியுடன் வேதனையா?







மூட்டுவலி, முழங்கால்
குதிக்கால் வலி கழுத்து, இடுப்பு
மற்றும் தோள்பட்டை வலி,

அனைத்து எலும்பு,
மூட்டு, தசைகளுடன்
தொடர்புடைய பிரச்சனைகள்

அறுவை சிகிச்சை, விபத்துக்கள்
இவற்றை தொடர்ந்து இருக்கும்
பிரச்சனைகள்

விளையாட்டு மற்றும்
ஆர்த்ரைடிஸ் வலிகளுக்கும்
தக்கமுறையில் பிஸியோதெரபி
சிகிச்சை பெற உடனடியாக நாடுங்கள்
அரசு பதிவுபெற்ற

PHYSIOTHERAPIST
**MURALIRAJ RAJAN**
B.P.T, M.P.T(Ortho), M.I.A.P, MCSP

தொடர்புகளுக்கு
**VIDA HEALTH**
**415-421, BROMLEY ROAD BROMLEY**
**KENT BRI 4PJ Ph : 0208 697 4766**
**Mobile : 07794424147**

மாதம்
ஒரு ஆன்மிகச்சுற்றுலா



## அறுபடைவீடு
## திருவண்ணாமலை
## சிதம்பரம், மதுரை மீனாட்சி
## கன்னியாகுமரி, திருப்பதி

குளு குளு வசதியுள்ள தங்குமிடங்கள்

சகல செலவு உட்பட
980 பவுண் மட்டும்

தொடர்புகளுக்கு
London
Euro Travels & Tours Ltd

Chennai
**ARS Tours**

111-B Loampit Vale
Lewisham London SE13
Tel : 0208 465 9666
Fax : 0208 465 9888

உலகின் எந்த பகுதிக்கும்
எங்களிடம் மலிவு விலையில்
விமான டிக்கெட்டுகள் பெற்றுக்கொள்ளலாம்

தமிழில் தொடர்பு கொள்ள
தி. அருள்தாஸ்

## AMBAAL JEWELLERS



*22 ct Gold & Diamonds*

784 London Road
Thornton Heath
Surrey CR4 6JB
Tel : 020 8689 8293
Fax : 020 8684 0323

176 Upper Tooting Road
London SW17 7ER
Tel : 020 8672 9955
Fax : 020 8672 7097

## VM CASH & CARRY

282, Lee High Road
London
Tel : 020 8852 3561

கலப்படமற்ற தூய தானியவகைகள்,
புதிது குன்றாத கடல் உணவு வகைகள்,
பச்சை நிலையில் பொலிவுறும் இலங்கை,
இந்திய, தாய்லாந்து மரக்கறி வகைகள்,
கார நறுமண உணவுப் பொருட்கள்,
மதுபான வகைகள் வீடியோச் சுருள்கள்,
தமிழர்களின் பாரம்பரிய பண்டிகைகள்
விழாக்களுக்கான பொருட்கள்
அனைத்திற்கும் நாட வேண்டிய இடம்.



வெள்ளிக்கிழமைகளில்
இறக்குமதி செய்யப்பட்ட
மீன் வகைகள் விற்பனையாகின்றன

## HAPPY TEX

6 Ealing Road
Wembley
Middx HA0 4TL
Tel : 020 8903 0782
Fax : 020 8903 4680

- *Money Transfer*
- *Textiles*
- *Watches*
- *Jewellery*
- *Rice Cookers*
- *Perfume*
- *Wedding Suits*



மாதம்
85 பவுண்
பணம்
செலுத்தி
மே மாதம்
தொடங்க
இருக்கும்
எங்கள்
நகைச்சீட்டில்
கலந்து கொள்ளுங்கள்

*New Mot Station Open !*

## Capital Autos Ltd

CA

Accident Repair Centre & General Services & Repairs to all Makes and Models

51A Milton Avenue East Ham London E6 18G
Tel : 020 8470 4789 Fax : 020 8472 2147 www.capitalauto.com

**BMW MERCEDES VAUXHALL HONDA VOLKSWAGEN NISSAN Ford**



இலண்டனில்
எந்த இடத்தில்
இருந்தாலும்
உங்கள் வாகனத் திருத்த
வேலைகளுக்கு
நீங்கள் செல்ல
வேண்டிய இடம்

- *Fully equipped M.O.T. & accident repair centre*
- *Insurance repairs welcome*
- *Recovery Service*
- *Approved insurance repairs*
- *Courtesy vehicle available For most repairs*
- *Professional friendly service and advice*
- *Collection & deliver within the local area*

*Hurry - Limited Offer !*

£ 10 OFF Your M.O.T ! BASED ON CURRENT M.O.T FEE OF £42.10 • OUR VOUCHER PER CAR ONLY

Reg : ____________
Model : ____________
Name : ____________
Tel : ____________

# மதுவை மறக்கலாம்



ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு விதத்திலே சாதனை செய்ய வேண்டும் என்கிற ஆசை இருக்கும்.

ஓர் ஆசாமிக்குச் சாராயம் குடிக்கிறதிலே சாதனை செய்ய வேண்டும் என்கிற ஆசை.

என் அளவுக்கு யாரும் குடிக்க முடியாது என்று சவால் விட்டார்.

ஒரு சாராயக்கடை வாசலில் போய் நின்று கொண்டு இவர் பாட்டுக்கு வாங்கிக் குடித்துக் கொண்டே இருந்தார்.

ஓர் அளவுக்கு மீறிப் போன பிறகு இவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

நிதானம் தவறிப் போயிற்று.

அப்படி இருந்தும்...

''இன்னொரு கிளாஸ் கொடு'' என்றார்.

கடைக்காரர் கொடுத்தார்.

இவர் வாங்கினார். எப்படியும் இதைக் குடித்துவிட வேண்டும் என்று முயன்றார். குழம்பிப் போனார்.

''என்ன குழப்பம் உங்களுக்கு?'' என்றார் பக்கத்தில் நின்று கொண்டிருந்தவர்.

இவர் சொன்னார், ''என்னோட வாய் எங்கே இருக்குன்னு எனக்கே தெரியலை. நீங்க கொஞ்சம் பாத்துச் சொல்லுங்களேன். இந்தச் சாராயத்தை அதிலே ஊத்தணும்.''

இதென்ன கேள்வி? உங்கள் வாய் உங்க தலையிலேதான் இருக்கு.''

''ஓ... அப்படியா விஷயம். கண்டுபிடிச்சி சொன்னதுக்கு ரொம்ப தேங்க்ஸ்.... !'' என்று சொல்லிவிட்டு அந்தச் சாராயத்தை அப்படியே தன் தலையில் ஊற்றிக் கொண்டாராம்.

தன் தலையிலேதானே வாய் இருக்கிறது என்று அவர் சொன்னார். அதனால் அங்கே கொண்டு போய் அதை ஊற்றி அபிஷேகம் செய்து கொள்கிறார் இவர்.

அது மட்டுமல்ல...

''அப்பாடா ... குடிச்சாச்சு ! இன்னொரு கிளாஸ் கொடு'' என்று கேட்க ஆரம்பித்து விட்டார்.

எப்படி இருக்கிறது இந்தக் கதை ?

இது கதையல்ல. நிஜம்.

இப்படிப்பட்ட ஓர் ஆள் ஒருத்தரை எனக்குத் தெரியும். அவர் ஒரு நாள் திடீரென்று என் முன் வந்து நின்றார்.

''சார் நான் இப்ப மதுப் பழக்கத்தை அடியோடு விட்டுட்டேன்'' என்றார்.

என்னால் நம்ப முடியவில்லை..

''அது எப்படி முடிஞ்சிது உங்களாலே? என்று கேட்டேன்.

அவருக்கு யாரோ ஒருத்தர் சில ஆலோசனைகளைச் சொன்னாராம்.

தென்கச்சி சுவாமிநாதன்

ஒரு சில நல்ல பழக்கங்களை வழக்கத்துக்குக் கொண்டு வந்து விட்டால் மதுவை மறந்துவிடலாம் என்று அவர் சொன்னாராம். அதன்படி இவர் நடந்தாராம். அவ்வளவுதான்.

இப்போதெல்லாம் அவர் சாராயக் கடைப் பக்கமே போவதில்லையாம்.

அது என்னங்க விவரம் – கொஞ்சம் சொல்லுங்களேன். மத்தவர்களுக்கும் உபயோகப்படும் என்றேன்.

அவர் ஒவ்வொன்றாகச் சொல்லத் தொடங்கினார்.

மொத்தம் பத்துக் குறிப்புகள் சொன்னார் :

1. தினமும் காலையில் இளம் சூடான நீரில் பழச்சாறு கலந்து சாப்பிட்டு அன்றாட வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும்.
2. தினமும் இரண்டு வேளை குளிக்க வேண்டும். ஒவ்வொரு வேளை குளித்தவுடனேயும் வெந்நீர் அல்லது எலுமிச்சை சாறு சாப்பிடவேண்டும்.
3. ஒரு சாப்பாட்டுக்கும் இன்னொரு சாப்பாட்டுக்கும் இடைவெளியில் எட்டு முதல் பத்துக் குவளை வரை தண்ணீர் குடிக்க வேண்டும்.
4. ஒரு சில குறிப்பிட்ட இடத்தில் உட்கார்ந்தால் கொஞ்சம் மது அருந்தலாமா என்று தோன்றும் மனது தூண்டும். சாப்பாட்டிற்குப் பிறகு அப்படிப் பட்ட இடங்களில் உட்காரக் கூடாது.
5. சாப்பாட்டிற்குப் பிறகு வெளியே போய் ஒரு சில நிமிடங்கள் காலாற நடந்துவிட்டு வரவேண்டும்.
6. சில நண்பர்கள் வீட்டுக்குப் போனால் உடனே மதுக்கோப்பையை நீட்டுவார்கள். அது ஒரு உபசரிப்பு. அப்படிப்பட்ட நண்பர்கள் வீட்டுக்குப் போகக்கூடாது. மது அருந்துகிற இடங்களுக்கும் போகக்கூடாது.
7. திடீரென்று ஒரு உந்துதல் (மூடு) வரும். இப்ப கொஞ்சம் மது சாப்பிட்டால் தேவலை என்று. உடனே என்ன செய்ய வேண்டும் தெரியுமா? இன்னொரு தடவை குளிக்க வேண்டும்.
8. தேநீர், காபி, புகையிலை வாசனைத் திரவியங்கள், இனிப்பு வகைகள், மீன், பொரித்த உணவு வகை, சிகரெட் இவையெல்லாம் தவிர்க்கப்பட வேண்டியவை.
9. புரதச் சத்து அதிகமுள்ள ஆகாரம். அப்புறம் பழம், பால், தயிர், தேன், பழச்சாறு, காய்கறிகள் இவற்றையெல்லாம் தாராளமாகச் சாப்பிடலாம்.
10. தியானம், யோகாசனம். இவை இரண்டும் மிக உதவிகரமாக இருக்கும். இழந்த தேக பலத்தையும், மன உறுதியையும் இவற்றின் மூலமாக மீட்க முடியும்.

மதுப்பழக்கத்திலேயிருந்து விடுபட விரும்புகிறவர்கள் இந்தப் பத்துக் குறிப்புகளையும் கொஞ்சம் கவனத்தில் வைத்துக் கொண்டாலே போதும்.

மயக்கம் விலகிப் போகும்.. மறுவாழ்வு வந்து சேரும்.

இன்றைய சராசரி மனிதன் மது அருந்தினால்தான் தன் சிறகுகள் விரியும். ஆகாயத்தில் பறக்கலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறான்.

மது மயக்கத்திலிருந்து விடுபடும்போது தான் மனிதனின் சிறகுகள் விரிகின்றன என்பதே உண்மை.

ஒரு விருந்து நடந்து கொண்டிருந்தது.

எல்லோரும் உற்சாகமாக மது அருந்திக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் மட்டும்ரொம்ப சாதுவாய் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவரைக் கவனித்த இன்னொருவர் கையில் ஒரு மதுக்கோப்பையைப் பிடித்துக் கொண்டு அவரை நெருங்கினார்.

''இந்தாங்க... சாப்பிடுங்க'' என்றார்.

''தயவுசெய்து என்னை மது சாப்பிடச் சொல்லிக் கட்டாயப் படுத்தாதீங்க'' என்றார் அந்தச் சாது.

''ஏன் அப்படிச் சொல்றீங்க?'' என்று கேட்டார் இவர்.

இதற்கு அவர் சொன்னார்.

சார் மறுபடியும் சொல்றேன். என்னை வற்புறுத்தாதீங்க. இதை வேணாம்னு தான் மறுக்கிறதுக்கு மூணு காரணங்கள் இருக்கு. முதல் காரணம்: மது சாப்பிடறது கெடுதல்னு ஒரு புஸ்தகத்துல படிச்சிருக்கேன். இரண்டாவது காரணம்: மது சாப்பிடறதில்லைன்னு என் மனைவிகிட்ட சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கேன். மூணாவது காரணம்: இப்ப நான் மது சாப்பிட்டிருக்கேன். ●

ஆகஸ்ட் 1முதல்
தமிழ்நாட்டிலிருந்து
வெளிவருகிறது
புதிய மாத இதழ்
கருஞ்சட்டைத்
தமிழர்
ஆசிரியர் :
சுப வீரபாண்டியன்

# எது தற்காப்பு?

இந்திய அரசின் பாதுகாப்பு ஆலோசகரான எம். கே. நாராயணன் தில்லி சென்றிருந்த தமிழக முதலமைச்சரை, இந்தியத் தலைமை அமைச்சரின் சார்பில் சந்தித்து உரையாடியதோடு, 31.05.2007 அன்று சென்னைக்கும் வந்து முதலமைச்சரோடு பேசியிருக்கிறார். இரண்டு இடங்களிலும், தமிழக மீனவர்களின் பாதுகாப்பு குறித்தே உரையாடியதாக இதழியலாளர்களிடம் அவர் தெரிவித்துள்ளார்.

எம்.கே. நாராயணன் நீண்ட நெடு நாட்களாகவே இந்திய அரசின் பொறுப்பு மிக்க அதிகாரத்துறையில் பங்கு பெற்று வருகிறார். எந்த ஒரு நேரத்திலும் அவருடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கோ, தமிழ் ஈழ மக்களுக்கோ இன்றுவரை எந்த ஒரு நன்மையையும் செய்துள்ளதாகக் கூற முடியவில்லை. மாறாக பல நேரங்களில் தமிழ் இனத்திற்கு எதிரான நிலைப்பாட்டையே அவர் கொண்டுள்ளார்.

1987ஆம் ஆண்டு ஜுலை மாத இறுதியில், யாழ்ப்பாணம் சுதுமலை அம்மன் கோயில் திடலிலிருந்து விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், யோகரத்தினம் யோகி, திலீபன் ஆகியோரை ஏற்றிக் கொண்டு தனி வானூர்தி தில்லி நோக்கிப் பறந்தது. அவ்வூர்தியில் ஆன்டன் பாலசிங்கமும் சென்னை விமான நிலையத்தில் இணைந்து கொண்டார். தில்லி அழைத்து வரப்பட்ட அவர்கள், அசோகா ஓட்டலில், மிகக் கடுமையான தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

அந்த நேரத்தில் அவர்களிடம் ஆசை காட்டியும், அச்சுறுத்தியும் பேச்சுவார்த்தை நடத்திய அதிகாரிகளில் எம். கே. நாராயணனும் ஒருவர். தீக்ஷித் அதை முன்னின்று நடத்த, நாராயணன் அதற்குத் துணை நின்றார்.

1991ஆம் ஆண்டு தொடக்கத்தில், புலிகள் ஆதரவு என்பதைக் காரணமாகக் காட்டி, தமிழகத்தில் தி.மு கழக ஆட்சி கவிழ்க்கப்பட்டதற்கும் நாராயணன் போன்ற சில அதிகாரிகள் பின்னால் நின்று உதவி செய்தனர்.

எனவே ஈழத்தமிழ் மக்களுக்கும், குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கும் எதிரான கருத்துடைய எம்.கே. நாராயணன் போன்றவர்கள் இன்று இந்தியாவில் வெளியுறவுத் துறை நிகழ்வுகளை முடிவு செய்யும் இடத்தில் இருப்பது மிகுந்த வேதனைக்குரியது. அவர் போன்றவர்கள் ஒடுக்கப்படும் மக்களுக்கு ஆதரவாக துரும்பையும் கிள்ளிப் போட மாட்டார்கள் என்பது வெளிப்படையான செய்தி.

சென்னையில் முதலமைச்சரைச் சந்தித்து விட்டு வெளியில் வந்த அவர் நிருபரிகளிடம், புலிகளால் இந்தியாவுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்தும், தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது குறித்தும் பேசியதாகத் தெரிவித்துள்ளார். இலங்கை அரசோடு சேர்ந்து இந்தியக் கடற்படை கூட்டுக் கண்காணிப்பு நடத்துவதைத் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளாத காரணத்தால், இந்தியக் கடற்படையும், கடலோரக் காவல் படையும் இணைந்து கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட இருப்பதாக கூறியுள்ளார். இலங்கை அரசுக்கு ராடார் போன்ற தற்காப்புக் கருவிகளை மட்டுமே இந்திய அரசு வழங்கும் என்றும், தமிழக மக்களைத் தாக்கக்கூடிய ஆயுதங்கள் எதையும் வழங்காது என்றும் உறுதி கூறியுள்ளார்.

அவருடைய உறுதிமொழி நமக்கு ஒரு சிரிப்பையே வரவழைக்கிறது. முப்படைகளையும் கொண்டு இலங்கும், அமெரிக்கா போன்ற வல்லாதிக்க நாடுகளின் மறைமுக ஆதரவைப் பெற்றுள்ள இலங்கை அரசுக்குத் தற்காப்பு தேவைப்படுகிறதாம். என்ன கூத்து இது? அரச பயங்கரவாதத்தினால் ஒடுக்கப்பட்டு வரும் 35 இலட்சம் தமிழ் மக்களைப் பற்றிக் கவலைப்படாத அவர், இலங்கை அரசின் தற்காப்பு பற்றிக் கவலைப்படுவது வேடிக்கையாக உள்ளது.

ஒரு விதத்தில் இலங்கை அரசு தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது மகிழ்ச்சி தரும் செய்தியாக இருந்தாலும், நாள்தோறும் வான் தாக்குதலுக்கு ஆளாகி, உயிரையும் உடைமைகளையும் இழந்து வரும் ஈழ மக்கள் குறித்து ஈரமோ இரக்கமோ இல்லாத அதிகாரிகளை எண்ணி வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை.

அடுத்த நாடுகளுக்கோ, போராளிகளுக்கோ ஆயுதங்களை வழங்கும் வல்லாதிக்க வணிகர்கள் அனைவருமே தற்காப்பு என்னும் பெயரில்தான் அவற்றை வழங்குகின்றனர் என்பதை நாம் மறந்து விட முடியாது. எனவே எந்த ஒரு பெயரிலும் தமிழ் ஈழ மக்களுக்கு எதிராக அரசுக்கு வழங்கப்படும் ஆயுதங்களை நாம் கண்டித்தே தீர வேண்டும்.


ஒடுக்கப்படும் மக்களுக்கு ஆதரவாக இந்தியா தன் நிலையை வெளிப்படுத்த வேண்டும். அல்லது அதில் தலையிடாமலாவது இருக்க வேண்டும். இந்த இரு நிலைகளில் ஒன்றை இந்தியா எடுக்க வேண்டும் என்பதே நம் விருப்பம். ஆனால் அந்த விருப்பம் நிறைவேற இந்த நாராயணன்கள் விடமாட்டார்கள் போலிருக்கிறது.

சாதி, மத, கட்சி வேறுபாடுகளை கடந்து தமிழக மக்கள், தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஒருமித்துக் குரல் கொடுத்தால், அதிகாரிகளின் ஆட்டம் அதன்பின் வெற்றிபெறாது. அந்த நாளை நோக்கி நாம் காத்திருக்கிறோம்.

**சுப வீரபாண்டியன்**

மாதம் ஓர் ஈழத்துச் சிவாலயம்

# ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயம்



திருக்காளத்திக் காட்டில் வேடன் கண்ணப்பனின் அன்புடைமையை உலகறியச் செய்ய இறைவன் தன இரு கண்களில இருந்தும் இரத்தம் சொரிய ஆடிய நாடகம் அங்கு இவ்வுலக மக்களை அருளாட்சி செய்ய தன் சிரசிலிருந்து இரத்தம் சொரிய ஆடிய நாடகம் இங்கு. இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம் இடைக்காட்டுக் கிராமத்திலுள்ள கொத்தவளவிலிருந்து சைவ வேளான் குலத்தைச் சேர்ந்த தீரபுத்திரரும் அவர் தம் இரு புதல்வர்களும் வன்னி நாட்டிற் குடியேறும் பொருட்டு கொடிய மிருகங்கள் நிறைந்த காட்டினூடாக 60 கல் தூரத்தைக் கால்நடையாகச் சென்று வள்ளி நாட்டை அடைந்தனர். அங்குள்ள மரமொன்றில் பறண் கட்டி இரவு துயில் கொண்டபோது தீரபுத்திரர் விசித்திரமான கனவொன்றைக் கண்டார். கோவிலொன்றில் பூசை நடைபெறுவது போன்றும், அங்குள்ள இறைவனுக்கு தீரபுத்திரரே பூசை செய்வது போன்றும் கனவு கண்டார். அதிகாலையில் கண்விழித்துப் பார்த்த போது தான் பறணில் படுத்திருப்பதையுணர்ந்தார். தீரபுத்திரரும் அவர் பிள்ளைகளும் அங்கே ஒரு குடிலமைத்து வாழ்ந்து வந்தனர். அக்கால கட்டத்தில் வன்னி மக்களைப்போல் தாமும் சேனைப்பயிர் செய்ய நாட்டங் கொண்டு அதற்கேற்ற மண்வளம் கொண்ட பூமி எது? எனத் தெரியாது தத்தளித்தபோது எல்லாம் வல்ல ஈசன் கனவிற் தோன்றி ''கொன்றை மரத்தைச் சுற்றியுள்ள காட்டை வெட்டிப் பயிர் செய்'' என ஆணையிட்டார். அதன் பிரகாரம் அவரும் பிள்ளைகளும் குறிப்பிட்ட இடத்திலுள்ள மரங்களை வெட்டி அதற்குக் கடைக்கோல் மூலம் தீமுட்டி எரித்தனர். அப்பொழுது கொன்றை மரத்தைச் சுற்றியுள்ள வனம் வேகாமல் இருந்தது. அதற்குப் பலமுறை தீமூட்டியும் அது எரியவில்லை. இதனால அப்பகுதியைக் கோடாரி கொண்டு வெட்டித் துப்புரவு செய்தனர். தீரபுத்திரர் கொன்னை மரத்திலுள்ள பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்தபோது ஒரு மண் திட்டில் எரிந்து கருகிய மரக்குற்றி போல் ஒன்று தென்பட்டது. அதை அகற்றும் பொருட்டு கோடரியால் அதனைக் கொத்தியதும் அதன் மேற்பகுதியிலிருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. இதனைக் கண்ணுற்ற தீரபுத்திரர் சிவனே ! சிவனே ! எனக் கூச்சலிட்டார். இவரின் அவல ஒலி கேட்டதும், அவர் புத்திரர்கள் கொன்றை மரத்தடிக்கு விரைந்து வந்தனர். ஒரு கறுத்த உருவத்திலிருந்து இரத்தம் கசிவதைக் கண்டனர். பயத்தினால் இருவரும் அபயக் குரலிட்டனர். இவ்வொலியை அயற்பிலவில் வேலை செய்து கொண்டிருந்த வன்னியர்கள் கேட்டதும் கொன்னை மரத்தடிக்கு ஓடி வந்தனர். அங்கு அவர்கள் கண்ட காட்சி அவர்களை மிக வியப்பில் ஆழ்த்தியது. என்ன செய்வது என்று அறியாது திகைத்து நின்றனர். இந்நிகழ்ச்சி காட்டுத்தீபோல் எங்கும் பரவியது. வன்னி மன்னன் காதிலும் எட்டியது. உடன் மன்னன் அவ்விடத்திற்கு விரைந்து வந்தான். அங்கு நடந்த நிகழ்ச்சிகளை ஆதியோடந்தமாகக் கேட்டறிந்தான். அக்கறுப்பு உருவத்தை மிக நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தபோது அது ஒரு கருங்கல் என்பதை அறிந்து கொண்டான். தீரபுத்திரரின் கனவிற்தோன்றிய இறைவனின் திருவிளையாடல்தான் இது என்பதை ஊகித்தறிந்து அக்கல்லைச் சுற்றிவரவுள்ள மண்ணை அகற்றிப் பார்த்தபோது ஓர் இலிங்கம் போன்ற திருவுருவம் தென்பட்டது. இதைக் கண்ணுற்ற வன்னிமன்னன் இது ஒரு சுயம்பு இலிங்கம் என்றும், இதற்குக் கீழ்ப்பகுதியாகிய ஆவுடையார் இல்லை என்றும், இது தானாகத் தோன்றியமையால் இதை நாம் எல்லோரும் தான்தோன்றி ஈஸ்வரர் என்றும், வேகாவனத்தில் கோயில் கொண்டமையால் வேகாவனேஸ்வரர் என்றும் திருநாமங்களிட்டு வழிபடுவோம் எனக் கூறித் தன் அரண்மனை யடைந்தான். அதன்பின் ஊர்மக்கள் மண்சுவர் எழுப்பி ஓர் சிறிய கோவிலைக் கட்டினர். தீரபுத்திரர் தான்தோன்றீஸ்வரருக்குக் காலம் தவறாமல் தினமும் பூசை செய்து வந்தார்.

தீரபுத்திரரும் பிள்ளைகளும் தாம் வெட்டிய பிலவில் குரக்கனைச் சேனைப்பயிராக விதைத்தனர். குரக்கன் பயிர் விளைந்து கதிர் முற்றியதும் அதனைக் கொய்யக் கொய்ய குரக்கன் ஓட்டிலிருந்து மீண்டும், மீண்டும் குரக்கன் கதிர்கள் விளைந்து கொண்டே யிருந்தன. இது ஈசனின் அற்புதச் செயலென்று மகிழ்ந்து கொண்டிருந்த தீரபுத்திரருக்குத் தாமும்

மற்றவர்களைப் போல் மாற்றுப் பயிர்களாகிய நெல், சாமை, சோளம், வரகு போன்றவற்றைத் தம் பிலவில் உற்பத்தி செய்ய முடியவில்லையே என வேதனையுற்றார். அக்காலகட்டத்தில் அவர் கனவில் தோன்றிய ஈசன் ''உன் வேதனையை யாம் அறிவோம், நீ மாற்றுப் பயிர் செய்ய குரக்கன் ஒட்டுகள் தடையாய் இருப்பின், ஒட்டை நெருப்பால் சுட்டுவிடு'' என்று கூறினார். மறுநாட்காலை இறைவன் ஆணைப்படி தீரபுத்திரரும் அவர் குடும்பத்தினரும் குரக்கன் கதிர்களைக் கொய்துவிட்டு அதன் ஒட்டை நெருப்பால் சுட்டனர். அதன்பின் அவ்வயலில் மாற்றுப் பயிர்களை விளைவித்தனர். ஒட்டுக்களைச் சுட்டமையினால் அப்பிரதேசம் ஒட்டுசுட்டான் என்றும் அங்குள்ள இறைவனை ஒட்டுசுட்டான் தானதோன்றீஸ்வரர் என்றும் அழைத்துவருகின்றனர். தீரபுத்திரரும் அவர் வம்சத்தினரும் வாழ்ந்த இடம் இடைக்காடு என்றும், அவர்கள் நீர்ப்பாசனத்திற்காக பாவித்தகுளம் இடைக்காட்டுக் குளம் என்றும் இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றது.

ஒட்டுசுட்டான்தான்தோன்றீஸ்வரர் ஆலயம் முல்லைத்தீவு மாவட்டத்தில், மாங்குளத்திலிருந்து 14.5க்கல் தொலைவில் மாங்குளம் – முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ளது. இத்திருத்தலத்தின் ஆரம்பகாலப் பகுதியைச் சரியாக அறிய முடியா விட்டாலும் இது கிட்டத்தட்ட 5ஆம் நூற்றாண்டளவில் தோன்றியிருக்கலாமென வரலாற்றுக் குறிப்புக்கள் மூலமும், கர்ணபரம்பரையினரின் வாயிலாகவும் அறியக்கூடியதாக இருக்கின்றது. இப்பிரதேசத்தில் ஆதிகாலத்தில் சில சித்தர்கள் வாழ்ந்து முக்தி யடைந்தார்கள் என்றும் தெரிய வருகின்றது. கோவிலின் பூசைகளை இடைக்காட்டுத் தீரபுத்திரரின் பரம்பரையினரே தொடர்ந்தும் செய்து வந்தார்க ளென்றும், திருப்பணி வேலைகளைக் குளக்கோட்ட மன்னன் செய்வித்தான் என்றும் இக்கோவிலின் வடதிசையில் இருக்கும் முத்தரயன் கட்டுக்குளத்தை வெட்டிக் கட்டி நீர்ப்பாசன வசதி செய்தான் என்றும் முன்னோர் மூலமாக அறியக்கிடக்கின்றது. அதன்பின் ஆண்ட வன்னி மன்னர்களே இக்கோவிலின் திருப்பணி வேலைகளை அவரவர் காலத்தில் செய்வித்தனர் என்றும் தெரியக்கிடக்கின்றது. கி.பி 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ்வன்னிப் பகுதியில் பகிரங்க வேலைத் திணைக்களத்தில் ஓவசியராக கடமையாற்றிய சண்டிலிப்பாயைச் சேர்ந்த சிவபக்தர் திரு.த.சின்னத்துரை எனபவரால் கோவிற் திருப்பணி வேலைகளும் அவர்தம் பத்தினியின் விருப்பத்திற்கு இணங்கத் தீர்த்தக் குளமும் வெட்டிக் கட்டப்பட்டது. இத்திருக்குளம் இலங்கையில் வேறு எந்தக் கோவிலிலும் இல்லாத முறையில் அக்காலத்தில் தென் இந்தியப் பிரதம திருத் தலங்களிலுள்ளது போல் அமைக்கப்பட்டுள்ளது. திருக்குளத்தின் நான்கு பக்கமும் சுற்றிச் கொங்கிறீற் கூரையால் வேய்ந்த திருமடம். குளத்தின் நடுவில் சுவாமி மண்டபம், அதன் கீழ் கிணறு, சுற்றிவரக் கட்டுப்படிகள், வற்றாத நீருற்று, இவையெல்லாம் திருக்குளத்தின் சிறப்பை இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

## பஞ்சகாலத்திலும் அன்ன தானம் செய்த அன்னபூரணி

இத்திருத்தலத்தின் தீர்த்தகேணி மடத்தில் அன்று தொடக்கம் இன்று வரை ஒரு சில குடும்பத்தினர் பரம்பரை பரம்பரையாக கோவில் மகோற்சவ காலத்திலும் விசேட விழாக்களின் போதும் அடியார்களுக்கு அன்னதானம் செய்து வருகின்றனர். நம் நாட்டில் அரிசிக்குப் பஞ்சம் ஏற்பட்டு பாண் வாங்கக் கடை முன் வரிசையாக நின்ற காலத்திற்கூட இக்கைங்கரியம் தடையின்றித் தொடர்ந்து நடைபெற்று வந்ததென்றால் அது வேகாவனப் பெருமானின் அருளல்லவா? எல்லாம் வல்ல இறைவன் மாதொருபாகன். அவன் இடப் பக்கத்திலிருக்கும் அன்னபூரணியின் அருட்பார்வை இருக்கும் வரை அன்னத்திறகேது பஞ்சம்?

## உடல் வலிக்கு வெந்நீர் அபிஷேகம்

கோவிற் திருப்பணிக்காக கொண்டுவரப்பட்ட சீமேந்துப் பீப்பாக்கள் (அக்காலத்தில் சீமேந்து பீப்பாக்களிற்றான் அடைத்திருக்கும் கடதாசிப் பைகளில் அல்ல) அரச மரத்தடியில் இறக்கி வைக்கப் பட்டிருந்தது. அன்று நடுநிசியில் பெய்த மழையில் இருந்து நனையாவண்ணம் சீமேந்துப் பீப்பாக்கள் பாதுகாப்பான இடத்திற்கு நகர்த்தப்பட்டிருந்தன. இச்செயலை யார் செய்தது என்று தெரியாது திகைத்தனர் திருப்பணிச் சபையினர். அப்போது அந்தப்பக்கம் வந்த கோயில் அர்ச்சகர்தான் அன்று பின்னிரவு ஓர் கனவு கண்டதாகவும் அதில் தோன்றிய ஈசன் ''சீமேந்துப் பீப்பாக்கள் உருட்டியதால் என்னுடல் முழுவதும் வலிக்கின்றது. எனக்கு வெந்நீர் அபிஷேகம் செய்'' என்று கூறத் தான் அதி காலையில் வேகாவனப்பெருமானுக்கு வெந்நீரால் அபிஷேகம் செய்ததாகக் கூறினார். இதனைக் கேட்ட திருப்பணிச் சபையினர் பெருமானின் திருவருளை நினைந்து பேரின்பமடைந்தனர்.

## நடுநிசியில் தன் தொண்டனின் பசி தீர்த்த தாயுமானவர்

ஒரு நாள் ஓவசியர் சின்னத்துரையர் கோவிற் திருப்பணி வேலைக்குரிய பொருட்களை வாங்கும் பொருட்டு யாழ்ப்பாணம் சென்று நடுநிசியில் ஒட்டுசுட்டான் திரும்பினார். அப்பொழுது அவருக்கு நல்ல பசி. அன்று மதியமும் சாப்பிட அவருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. தண்ணீரைக் குடித்தாவது தம் வயிற்றை நிரப்ப எண்ணி கோயிற் கிணத்தடியை நோக்கிச் சென்றதும் கோவிற் பூசகர் புக்கையையும், வாழைப்பழங்களையும் ஒரு தாம்பாளத்திலிருந்து உண்ணக்கொடுத்தார். அதை வாங்கிய சின்னத் துரையர் தன்னிருப்பிடம் சென்று பசியாறப் புசித்தார். அடுத்த நாள் தாம்பாளத்தை கோவிற் பூசகரிடம் கொடுக்க, பூசகர் தாம் தரவில்லையே என்று கூற சின்னத்துரையர் நடுநிசியில் நடந்தவற்றை விபரமாகக் கூறினார். அப்பொழுது இதுவும் தான்தோன்றீஸ்வரரின் திருவிளையோடலே என்று உணர்ந்து மனம் நெகிழ்ந்தார். அவர் கருணைக் கடலல்லவா! தாயுமானவரல்லவா ! தம் அடியார் பசித்திருக்கப் பார்த்திருப்பாரா ? என்னே அவன் கருணை ! என்னே அவன் அருட் திருவிளையாடல்கள் !

## கல்லுமாடும் புல்லுத்தின்னுமா?

ஒருநாள் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்குத் தன் பரிவாரங்களுடன் வந்த போத்துக்கேய உயர் அதிகாரி அங்குள்ள நந்தியெம் பெருமானைச் சுட்டிக்காட்டி உந்தக் கல்மாடும் புல்லுத்தின்னுமா ? என ஏளனமாகவும் ஆணவத்துடனும் கோயிற் பூசகரைக் கேட்டான். இதற்கு உடன் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த பூசகரிடம் நான் நாளைக்கு இதே நேரம் இங்கு வருவேன் உங்கள் கல்லுமாடு புல்லுத் தின்னாவிட்டால் உங்கள் சமயம் பொய்ச் சமயம் எனக் கருதி இக்கோவிலை இடித்துத் தரைமட்டமாக்கி அதில் கிறிஸ்தவ தேவாலயத்தை கட்டி சகலரையும் அதை வழிபடும்படி செய்வேன் என அகங்காரமாகக் கூறித் தன் இருப்பிடம் ஏகினான். இதனால் மனம் கலங்கிய பூசகரின் கனவிற்தோன்றிய தான்தோன்றீஸ்வரர் "நீ கவலைப்படாதே நாளைக்கு நீ தரும் அறுகம்புல்லை நான் நந்தியாக இருந்து உண்பேன்" எனக்கூறி மறைந்தருளினார். அடுத்தநாள் போத்துக்கேய அதிகாரி தன் பரிவாரங்களுடன் குறிப்பிட்ட நேரம் வந்து சேர்ந்தான். அவன் கோவிலுக்குள் வந்ததும் பூசகர் ஏற்கனவே தயாராக வைத்திருந்த அறுகம்புல்லைப் பாலில் நனைத்து நந்தியின் வாயில் வைத்தார். அது உடனே தன் நாக்கை நீட்டி அறுகம்புல்லை வாய்க்குள் இட்டுத் தின்றது. பின் எழுந்து நின்று சாணியும் போட்டது. இவ்வற்புதத்தைப் பார்த்துக் கொண்டு நின்ற போத்துக்கேய அதிகாரி உடன் ஓடிச் சென்று பூசகரின் காலில் விழுந்து வணங்கி மன்னிப்புக் கேட்டதுமல்லாமல் கோவிற் திருப்பணிக்குப் பெரும் தொகை பொன்னும் பொருளும் கொடுத்தான். ஈசனின் அருளை நினைந்து மனம் கசிந்து கண்ணீர் மல்கினான். அன்றிலிருந்து தான் சமய மாற்றல் முயற்சியில் ஈடுபடுவதில்லை என சபதமும் பூண்டான்.

## பிரத்தியேகமான பாலஸ்தாபனம், எண்ணைக்காப்பு, கும்பாபிஷேகக் கிரியைகள்

இவ்வாலயத்திற்குத் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கும் பொருட்டு 18.12.89இல் நடைபெற்ற பாலஸ்தாபனம் தொடங்கி 10.11.93இல் நடைபெற்ற கும்பாபிஷேகம் வரை சில முக்கிய சடங்குகளும் நிகழ்ச்சிகளும் புனிதமானவையும் வேறு திருத்தலங்களில் நிகழாதவைகளுமாகும். பாலாலயத்தில், மூல மூர்த்தியான சுயம்புலிங்கம் தவிர்த்த ஏனைய பரிவார மூர்த்திகள் யாவும் தாபிக்கப்பட்டன. மூல மூர்த்திக்குப் பதிலாக சந்தனக் கட்டையிலான இலிங்கமே தாபிக்கப்பட்டது. இத்திருவுருவத்தைக் கும்பாபிஷேகத்தின் பின் சந்தனக் கல்லில் அரைத்துச் சந்தனக்காப்பாக மூலவருக்குப் பூசி இரண்டறக்கலக்கப்பட்டது. சுயம்பு இலிங்கத்திற்கு தைலதாரா பாத்திரத்தின் மூலமே எண்ணைக் காப்பிடப்பட்டது. அடியார்கள் சுயம்பு இலிங்கத்திற்கு மட்டும் தம் கையால் எண்ணைக் காப்பிடுவதில்லை. இச்சந்தர்ப்பத்தில் மூலவருக்கு மிக அருகிற்சென்று வழிபடக் கூடியதாக மாத்திரமல்லாமல் அவரின் உச்சியில் தீரபுத்திரர் கோடரியால் வெட்டிய தழும்பு இன்றும் இருப்பதைக் காணக்கூடியதாகவும் இருந்தது. இமய மலைச் சாரலிலுள்ள ஹரித்துவாரிலிருந்து இதற்கென விசேடமாகக் கொண்டுவரப்பட்ட புனித கங்கை நீரால் சகல மூர்த்திகளுக்கும், கலசங்களுக்கும் அபிஷேகம் செய்யப்பட்டது. 50 சிவாச்சாரியார்கள் பங்கு கொண்டு உத்தமத்தில் உத்தமமான பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் எல்லாம் வல்ல இறை திருவருளால் நிறைவேறியது.

மூலவர் சுயம்புலிங்கத்திற்கு ஆவுடையார் பகுதி இல்லை. அதற்கு ஒரு ஆவுடையாரை அமைக்கவோ

பொற்கவசம் அணியவோ ஈசனின் அனுமதி கிடைக்கவில்லை. கோஷ்டத் தெய்வங்களாக தெட்சணாமூர்த்தியும், இலிங்கோற்பவரும் அமைந்துள்ளனர். பரிவார மூர்த்தங்களாக விநாயகர், மகாவிஷ்ணு, வள்ளிதேவசேனா சமேத சுப்பிரமணியர், சண்டேஸ்வரர், நவக்கிரக நாயகர்கள், சந்தான கோபாலர், பைரவர், கொடித்தம்பப் பிள்ளையார் போன்றோர் தம் தம் சன்னிதியில் அமைந்துள்ளனர். மகா மண்டபத்தில் பூலோக நாயகியும், சிவகாமி சமேத நடராஜப் பெருமானும் தென்முகமாகவிருந்து அருள் பாலிக்கின்றனர். தான்தோன்றீஸ்வரற்குத் தினமும் மூன்று காலப்பூசை நடைபெற்று வருகின்றது. இவ்வாலயத்தின் வருடாந்த மஹோற்சவம் ஆனிமாத அமாவாசையில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து பௌர்ணமியன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும். ஆனி உத்தரம், சப்பரம், வேட்டை, தேர், தீர்த்தம், பூங்காவனம் போன்ற விஷேட திருவிழாக்களைப் பார்ப்பதற்கு வன்னி மக்கள் மாத்திரமல்லாது யாழ்க்குடா நாட்டிலுள்ள அடியார்களும் வருவர். இங்கு நடைபெறும் வேட்டைத் திருவிழா மிகவும் விசேடமானது. தீராத நோயினால் பீடிக்கப்பட்டோரும் ஏனையோரும் தாம் வேட்டைத் திருவிழாவின் போது விரதமிருந்து வேடனாக வருவதாக நேர்ததிக் கடன் வைப்பர். ஆயிரக்கணக்கான அடியார்கள் வேடுவ உடை தரித்து பெருமானுக்குப் பின் செல்வர். வேட்டைத் திருவிழாவின் போது சுவாமி வேட்டையாடுமிடத்தில் குழுமி நிற்கும் வேடுவர் கூட்டம் நடக்கும்போது பற்றைக்காடு நடப்பது போன்று தென்படும். சுவாமி வேட்டையால் திரும்பி வந்ததும் சுவாமிக்கும் அம்மனுக்கும் இடையே வாதாட்டம் நடைபெறும். இருவருக்குமிடையிலுள்ள ஊடலை மணியகாரனே தீர்த்து வைப்பார். கிட்டத்தட்ட 40 அடி உயரங்கொண்ட கட்டுப்படற் சப்பரத்தில் சுவாமி வீதி உலாவரும் காட்சியைக் காண ஆயிரம் கண்கள் போதா 1998 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த ஒட்டு சுட்டான் பிரதேச மக்கள் 2000 ஆம் ஆண்டில் மீள் குடியேறினர். அப்பொழுது அங்குள்ள வீடுகளும் ஆலயமும் சிதைந்து இருப்பதைக் கண்டனர். கோவிலைப் புனருத்தாரணம் செய்யும் பொருட்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருப்பணி வேலைகள் நடைபெற்றன. 13.07.2005 ஆம் ஆண்டில் மகா கும்பாபிஷேகம் இறையருளால் நிறைவேறியது. திருக்கயிலாயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட மானசரோபர், உமாநதி, கௌரி குண்டத் தீர்த்தங்கள் மூலவர் உட்பட சகல மூர்த்திகளுக்கும், கலசங்களுக்கும் அபிஷேகிக்கப்பட்டமை இங்கு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது. இக் கும்பாபிஷேகத்தின் போது இலிங்கோற்பவ மூர்த்தி, மகாவிஷ்ணுமூர்த்தி ஆகியவை புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டதுமல்லாமல் மின்சார இயந்திரத்திற்குப் பதிலாக வேறொரு இயந்திரமும் அமைக்கப்பட்டது. சிவாச்சாரியார்கள் தங்குதற்கேற்ற சகலவசதிகளும் கொண்ட விடுதியொன்றும் நிர்மாணிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான்

கயிலைமணி திருமதி. அருள்சுவாமிநாதன்

## நயினை நாகபூஷணி பாதமலர் நயப்போடு சேர்ந்தேகிய குருமணி சிவாசாரிய சுவாமிநாத பரமேஸ்வர குருக்கள்.

''லங்காயாம் ஸாங்கரீம்'' என குறிப்பிடப்படுகின்ற 64 சக்தி பீடங்களிலே ஒன்றாய் மிளிரும் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் ஆதீன குருவும், யாழ்ப்பாணத்தின் மணிமகுடமாய் மிளிரும், ஈழ நல்லூர் ஆலயத்தின் மஹோற்சவ குருவும் பாடல் பெற்ற தலமான திருக்கோணேஸ்வரம் உட்பட்ட இலங்கையின் பல பாகங்களிலும் அமைந்த நூற்றுக்கணக்கான ஆலயங்களின் கும்பாபிஷேக பிரதிஸ்டா குருவுமாக விளங்கிய மாபெரும் சிவாசரிய பெருந்தகை ''பிரதிஸ்டா பூஷணம்'', ''சிவாகம ஞானபானு'', சிவாசாரிய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் 21.05.2007 அன்று சென்னை மயிலாப்பூரில் தேகவியோகமானார் எனும் செய்தி சைவ உலகை பெரும் சோகத்திலே ஆழ்த்தியது. அன்பு, அறிவு, அழகு, அடக்கம், அமைதி என்கின்ற ஐவகை குண இயல்பும் தன்னகத்தே கொண்டவர். இலங்கையின் சிவாசாரிய பாரம்பரியத்திலே அமைந்த முதன்மை சிவாசாரியர் வரிசையிலே இவருக்கு ஒரு தனி இடம் உண்டு. கம்பீரமான வேத மந்திர உச்சாடனமும், சிறந்த கிரியை ஆற்றும் திறனும், அழகான பேச்சு வன்மையும், சிவாசாரியாரின் தனித்தன்மை அமைந்த சிறப்புகள், ஆலய கிரியைகள் மட்டுமல்லாது, அந்தணர்களின் வைதீக கிரியை நெறிகளிலும் சிறப்புற பணியாற்றியவர். திருமணம், பூணூல் சடங்கு, சீமந்தம், சிவாசார்ய தீக்ஷை, போன்ற கிரியைகளை நெறிப்படுத்தியவர். சிங்கப்பூர், மலேசியா இலண்டன், அவுஸ்ரேலியா, கனடா போன்ற நாடுகளில் ஆலய கும்பாபிஷேகங்களை நடாத்தி நம் நாட்டிற்கு பெருமை தேடித் தந்தவர். இலண்டனின் முதல் ஆலயம் எனப்படும் ஆர்ச்வே முருகன் ஆலய முதல் கும்பாபிஷேகம் செய்த பெருமை, சிவாசாரியாரையே சாரும். குருக்கள் ஐயாவின் இறுதிக்கிரியை வைபவங்கள் கொழும்பில் நடைபெற்றது. அங்கு கூடியிருந்த கூட்டம் அவரின் புகழுக்கு மகுடம் வைத்ததாய் அமைந்தது. எங்கு சென்றாலும் தன் பெயரோடு ஊரின் பெயரையும் சேர்த்து பெருமை தேடிக்கொண்டவர். தனது 80வது வயதிலே அவனி வாழ்வு துறந்து நயினை நாகபூஷணி பாதமலர் சேர்ந்தேகினார். குருக்கள் ஐயாவின் ஆன்மாநித்தியமான சாந்தி பெற்று நிலைக்க பிரார்த்திப்போமாக !

# முள்ளுக் கரண்டி

ஆங்கில மூலம்
அழகு சுப்பிரமணியம்
தமிழில்
ராஜ ஸ்ரீகாந்தன்



பார்வதியைத் தனது அறைக்கு அழைத்துச் சென்றாள் மேற்றன். அந்த அறையை வியப்புடன் சுற்றி நோக்கினாள் அந்தச் சிறுமி. அதிபருடைய அறையினைப் போலவே அந்த அறையும் அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. இந்நகரிலுள்ள ஒவ்வொருவரும் ஆங்கிலேயர்களைப் போல வாழக்கூடும் என்று அவள் எண்ணினாள். அவள்கூட வளர்ந்த பின்னர் அவர்களைப் போல வாழலாம்.

புதிய சிறுமியின் கிராம வாழ்க்கையைப் பற்றிக் கூறுமாறு மேற்றன் கேட்டாள். அவள் தனது பெற்றோர், சுப்பு, சுப்புவின் வண்டியோட்டியான புல்லுக்காரன் ஆகியவர்களைப் பற்றிச் சொன்னாள். அவளுக்குப் புல்லுக்காரனின் பெயர் தெரியாது. அவனைப்பற்றித் தெரிந்ததெல்லாம் அவன் சுப்புவின் புல்லுக்காரன் என்பது மட்டுமே. அவனை ஏன் அப்படி அழைக்கிறார்களென்றும் அவளுக்குத் தெரியாது. அவன் அடிக்கடி அவளைக் கேலிசெய்து பின்புறத்தில் செல்லமாகக் கிள்ளுவான். வேறு யாராவது அப்படிக் கிள்ளினால் அவளுக்குப் பொல்லாத கோபம் வரும். ஆனால் புல்லுக்காரன் கிள்ளும்போது மட்டும் அவள் மகிழ்ச்சியடைவாள்.

'' நீ ஆங்கிலம் படிக்கவேண்டியிருக்கும். ஒவ்வொரு நாளும் சிறிது நேரம் நான் அதற்கு உதவுவேன்.'' என்றாள் மேற்றன்

மேற்றன் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டு அவளுக்கு ஆங்கிலம் கற்பித்தாள். ஆனால் பார்வதியோ ஆங்கில எழுத்துக்களைக் கற்றுக் கொள்வதற்கு திணறினாள். பொறுமை இழுந்த மேற்றன் இதற்காக அவளை ஏசினாள். பார்வதிக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. பின்னர் மேற்றன் இரக்கம் கொண்டு அவளைத் தேற்றினாள்.

''ஓ! அழாதேயம்மா. தயவுசெய்து அழாதே ஆரம்பத்தில் சற்றுச் சிரமமாகத்தான் இருக்கும். ஆனால் வெகு விரைவில் நீ இதில் திறமை பெற்றுவிடுவாய். நீ ஒரு கெட்டிக்காரப் பெண். எண் கணிதத்தில் மிகவும் கெட்டிக்காரியாக இருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்.''

பார்வதி புறங்கையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். மேற்றன் ஒரு சொக்கிளேற்றுத் துண்டைக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தாள். பார்வதி அதனை வாயில் போட்டுக்கொண்டு மேற்றனைப் பார்த்தாள்.

''சாப்பிடம்மா, ஆனால் சாப்பிடுவதற்கு முன் நீ எனக்கு நன்றி சொல்ல வேண்டும். யாராவது உனக்கு எதையாவது கொடுக்கும் போது கட்டாயம் 'நன்றி' என்று சொல்ல வேண்டும்.''

''நன்றி.''

''ஓ! அப்படியில்லை. 'நன்றி மேற்றன் அக்கா' என்று சொல்ல வேண்டும்.''

''நன்றி மேற்றன் அக்கா.''

மேற்றன் பார்வதிக்கு ஒரு படத்தைக் காட்டி, ''நீ இதனை பார்த்திருக்கிறாயா?'' என்று கேட்டாள். அதில் யேசுநாதரும் அவரைச் சுற்றிப் பல குழந்தைகளும் இருந்தார்கள்.

''இல்லையே இவர்கள் யார்?''

''இது யேசுநாதரின் படம். எமது ஆண்டவரும், இரட்சகரும் இவர்தான்.''

''அப்படியென்றால் என்ன?''

அவர் பாவிகளாகிய எங்களை மீட்பதற்கென உதித்தவர். எங்களைப் பாவங்களிலிருந்து மீட்பதற்காக அவர் சிலுவையில் மரித்தார்.

''இப்பொழுது இவையெல்லாம் உனக்கு விளங்காது. வளர்ந்த பின்பு புரிந்துகொள்வாய். யேசுநாதர் குழந்தைகளை நேசிப்பவர். 'குழந்தைகளின் உலகம்தான் கடவுளின் ராஜ்யம்' என்று அவர் கூறினார். நீ அவரிடம் செல்லவேண்டும் பார்வதி, உன்னைஅவர் இரட்சிப்பார்.''

''அவரைப்பார்க்கவே முடியாதபோது எப்படி யக்கா அவரிடம் போகமுடியும்? அவர் பாடசாலைக்கு வருவாரா?''

''ஓ! இவற்றைக் கூட நீ அறியாமலிருக்கிறாயே. ஒரு கிறிஸ்தவக் குழந்தை இவற்றைக் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். உனது பெற்றோர்கள் உன்னைச் சரியான வழியில் வளர்க்கவில்லை.''

''மேற்றன் அக்கா''

''என்ன?''

''அவருடைய மனைவிகள் எங்கே?''

''யாருடைய மனைவிகள்?''

''அவருடைய மனைவிகள் தான். அவருடைய பெயரென்ன? ஏதோவொரு நாதரென்று சொன்னீர்களே!''

''ஓ! தெய்வ நிந்தனை செய்கிறாளே'' என்று தனது தலையிலடித்துக் கொண்டாள் மேற்றன். ''ஐயோ நான் என்ன செய்வேன், இவள் தெய்வ நிந்தனை செய்துவிட்டாளே ஆண்டவனுக்கெதிராக ஒருபாவத்தைத் தேடிக்கொண்டுவிட்டாளே!''

மேற்றன் தளர்ச்சியுடன் காணப்பட்டாள். பார்வதி முட்டாள் தனமான கேள்வி ஒன்றால் ஆண்டவனுக்கு எதிராக பாவம் ஒன்றைத் தேடிக் கொண்டாள் என்று மேற்றன் நம்பினாள். பரிசுத்தமானவர்களுக்கும் மேலான பரிசுத்தம் மிக்கவருக்கு மனைவியா?

யேசுநாதரின் படத்தின் முன்னாள் முழந்தாளிட்டு நின்று, கைகளைக் கூப்பி, சிரம் தாழ்த்தியவாறு பிரார்த்தனையொன்றை முணுமுணுத்தாள்.

பார்வதி மேற்றனின் நடத்தைகளைக் கண்டு அதிர்ந்து விட்டாள். அவளருகே சென்று முழந்தாளிட்டு அமர்ந்துகொண்டு அவளுடைய முந்தானையைப் பற்றிக் கொண்டாள்.

''நான் என்ன குற்றம் செய்தேனென்று தெரியவில்லையே, உங்களுடைய கடவுளுக்கு எத்தனை மனைவிகளிருப்பதாகத்தானே கேட்டேன் இதனை ஏன் கேட்டேனென்றால் எமது கடவுளுக்கு இரண்டு மனைவிகள் இருக்கிறார்கள்.''

''அது எந்தக் கடவுள்?''

''சுப்பிரமணியர்.''

''ஓ! நீ எப்படி உங்கள் கடவுளை யேசுநாதருடன் ஒப்பிட முடியும்! போ, போய் அங்கேயிரு,'' என்று கூறியபடி அவளைப் பிடித்துத் தள்ளினாள். அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தாள். அமைதியின்றிக் காணப்பட்டாள்.

பார்வதி ஒரு மூலையில் அமர்ந்து வெருட்சியுடன் அவளை நோக்கியவாறிருந்தாள். சிறிது நேரத்தின் பின் ஒருவாறு அமைதி அடைந்து பார்வதியை நோக்கிச் சென்று அவளுடைய தலையைக் கோதியபடியே, ''குழந்தாய், நீ அப்படி யெல்லாம் சொல்லக்கூடாது. போகப்போக அவை உனக்கு விளங்கும். நிச்சயமாக நீ யேசுநாதரிடம் செல்வாய். அவரொருவரால் மட்டும்தான் உன்னை இரட்சிக்க முடியும்'' என்றாள்.

பின்னர் பார்வதியைத் தூக்கித் தனது மடியில் இருத்திக் கொண்டு ''இதோ பார்! நீ இப்பொழுது உனது தாயாருடன் இல்லை. எங்களுடன் இருக்கிறாய். நாங்கள் சொல்வதைத்தான் நீ கேட்டு நடக்க வேண்டும். நீ இரட்சிக்கப்பட வேண்டுமாயின் யேசுநாதரிடம் நான் செல்ல வேண்டும்.'' என்று கூறினாள்.

''இரட்சிக்கப்படுதல் என்றால் என்ன?''

''நீ சொர்க்கத்திற்குப் போக விரும்பினால் யேசுநாதரிடம் செல்ல வேண்டும்.''

''அப்படியென்றால் அம்மா சொர்க்கத்திற்குப் போக மாட்டாளா?'' என்று அச்சிறுமி கண்களை அகல விரித்துக் கொண்டு கேட்டாள்.

அவளுடைய கண்களை நோக்கிய மேற்றன், ''அதுபற்றி எனக்குத் தெரியாது. எப்படியோ உனது தாயார் நலமாக இருப்பாள் என்று நான் நினைக்கிறேன். அவள் யேசுநாதரைப் பற்றியோ, அவருடைய தேவ வாக்குகள் பற்றியோ அறிந்திருக்க மாட்டாள். ஆனால், அவரைப்பற்றி அறிந்திருந்தும் அவருடைய அழைப்பிற்குச் செவிசாய்க்காதவர்கள் சொர்க்கத்திற்குப் போக முடியாது.'' என்று கூறினாள்.

அந்தச் சிறுமி நகத்தைக் கடித்தவாறு ஏதோ சிந்தனையில் மூழ்கினாள். தான் கூறியவற்றை யெல்லாம் பார்வதி புரிந்து கொண்டிருப்பாளோ வென்பது மேற்றனுக்குத் தெரியவில்லை. பாடசாலை மணி அடித்தது. வெளி மாணவிகள் மதிய உணவிற்காக வீடுகளுக்குச் செல்வார்களென்றும், விடுதி மாணவிகள் பாடசாலையிலேயே தங்கள் உணவை உண்பார்கள் என்றும் மேற்றன் பார்வதிக்குச் சொன்னாள்.

''எனக்குப் பசியாக இருக்கிறது அக்கா, ஏதாவது உண்ணத் தருவீர்களா?''

''தயவுசெய்து தருவீர்களா மேற்றனக்கா என்று சொல்ல வேண்டும்'' என்று அவளைத் திருத்தினாள் மேற்றன்.

''தயவுசெய்து தருவீர்களா மேற்றன் அக்கா?''

''நான் போய் உனக்கு உணவு கொண்டு வருகிறேன். கரண்டியாலும் முள்ளுக் கரண்டியாலும் உண்ணப் பழகும் வரை நீ உணவு மண்டபத்திற்குப் போகக் கூடாது.''

''அப்படி என்றால் என்ன?''

''பொறுத்துக் கொள், நீ அதனைப் பின்னர் பார்க்கலாம்.''

மிக விரைவில் ஒரு கோப்பையில் சோறு எடுத்துக்கொண்டு மேற்றன் திரும்பினாள். ஒரு கரண்டியும், முள்ளுக் கரண்டியும் சோற்றினுள் குத்தி வைக்கப்பட்டிருந்தன.

''இங்கே வா, இவற்றை எப்படி உபயோகிப்பது என்று சொல்லித் தருகிறேன்.''

''எனக்கு அவைகள் வேண்டாம். நான் எப்போதும் எனது விரல்களால் தான் உண்பேன். தயவுசெய்து என்னை விரல்களால் உண்ண விடுங்கள் மேற்றன் அக்கா. எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது.''

''உனது வீட்டிற்தான் நீ கைகளால் உண்ணலாம். நீ ஓர் ஆங்கிலப் பாடசாலையில் படிப்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும். ஆங்கிலேயர் உண்ணும் முறையிற்தான் நீயும் உண்ண வேண்டும்.''

''வேண்டாம். மேற்றன் அக்கா, அதைத் தொடவே பயமாக இருக்கிறது. அந்த முள்ளு எனது கையிற் குத்திவிடும். தயவுசெய்து என்னைக் கைகளால் உண்ண விடுங்கள். எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது.''

''ச்சீ, முட்டாள்தனமாக நடந்து கொள்ளாதே. இது ஒரு முள்ளுக் கரண்டி. இது ஒருபோதும் உனது கையில் குத்தாது. உன்னை கைகளால் உண்பதற்கு விடமாட்டேன். புதிய மாணவி ஒருத்தி சரியான பழக்கவழக்கங்களைக் கற்காமல் விடுவது வேம்படிப் பாடசாலையின் சட்ட விதிகளுக்கு மாறான செயலாகும். நல்ல பிள்ளையைப் போல் எனதருகில் வந்து இரு. இவற்றை எவ்வாறு உபயோகிப்பதெனச் சொல்லித் தருகிறேன்.''

பார்வதி அவளருகே அமர்ந்துகொண்டு வேண்டா வெறுப்புடன் கவனித்துக் கொண்டிருந்தாள். எவ்வாறு உபயோகிக்க வேண்டுமென மேற்றன் சொல்லிக் கொடுத்தாள். பார்வதி அந்தப் புதிய கருவிகளைக் கொண்டு உண்பதற்கு முதற் தடவையாக முயற்சித்தாள். ஒரு கொலைகாரன் கட்டாரியை எப்படி பிடிப்பானோ அவ்வாறு முள்ளுக் கரண்டியைப் பற்றினாள். அதனைச் சரியாகப் பிடிக்கும் முறையை மேற்றன் சொல்லிக் கொடுத்தாள். இக்கலையைக் கற்றுக்கொள்ளப் பல மணிநேரம் எடுத்தது.

நான் எப்பொழுதும் இந்த முள்ளினாற்தான் உண்ண வேண்டமா மேற்றன் அக்கா? விடுதியிலுள்ள எல்லா மாணவிகளும் முள்ளினாற்தான் உண்பார்களா?

''ஆம்''

''அப்படியானால் சாப்பிட்ட பின்னரும் அவர்களுக்குப் பசியாகவிருக்கும்.''

''ஓ! நீ ஒரு பகிடிக்காரி.'' என்று கூறிச் சிரித்தாள் மேற்றன்

''மேற்றன் அக்கா!''

''என்ன?''

''நான் இரட்சிக்கப்படுவேனா?''

''யேசுநாதரிடம் சென்றால் இரட்சிக்கப்படுவாய்''

''அவர்கூட முள்ளுக் கரண்டியிளாற்தான் உண்பாரா?''

மேற்றனிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை. பார்வதி முள்ளுக்கரண்டியாலும் கரண்டியாலும் உண்டபோது சிந்திய உணவைத் துடைத்தாள். கைகளைப் பின்னால் கோர்த்துக்கொண்டு நிலத்தை நோக்கியவாறு ஆழ்ந்த சிந்தனையுடன் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தாள். கிறிஸ்தவ மதத்தைச் சேராத அந்தக் குழந்தை அவளுடைய சிந்தனையைக் கிளறிவிட்டது. சிலவேளை அவள் பார்வதியை மதம்மாறச் செய்துவிடலாம். அதற்காகச் திருச்சபையார் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள்.

மேற்றன் பார்வதியை நோக்கித் திரும்பினாள். அந்தச் சிறுமி கொட்டாவி விட்டாள்.

''பார்வதி, நீ மிகவும் களைத்துவிட்டாய். சிறிதுநேரம் நித்திரை செய்தாள் நல்லதென நினைக்கிறேன்.''

''ஆ...வ்'' பார்வதியின் இமைகள் கனத்தன. '' ஆ..வ்..'' அந்த முள்ளுக்கரண்டி...''என்று பிதற்றியபடியே மேற்றனின் கட்டிலில் சாய்ந்தவுடன் நித்திரையாகிவிட்டாள். ●


**நம்பிக்கை மூலை :** எட்டு வயதுச் சிறுமி ஒருத்தி கடுமையான நோய்க்கு ஆட்பட்டிருந்தாள். அதே நோய்க்கு ஆட்பட்டு, அதற்கான எதிர்ப்பு சக்தியை உடலில் உருவாக்கியிருந்தான் அவளுடைய 5 வயதுத் தம்பி. அவனது ரத்தத்தை, உடலில் செலுத்தினால் அந்தச் சிறுமி உயிர் பிழைப்பாள். 5 வயது சிறுவனிடம் ரத்தம் எடுக்கிற வழக்கமில்லை என்றாலும் வேறு வழியில்லை. மருத்துவர் அந்தச் சிறுவனிடம் சூழலை விளக்கினார். சில விநாடிகள் யோசித்த சிறுவன், சரி! அக்காவைக் காப்பாற்ற நான் ரத்தத்தைக் கொடுக்கிறேன் என்றான்.

ரத்தம் எடுத்து அந்த சிறுமிக்குள் பாய்ச்சினாகள். அவள் உடல் நிலை முன்னேறுவதை மகிழ்ச்சியுடன் பார்த்தான் சிறுவன். திடீரென்று அவன் முகம் வெளுத்தது. உதடு பிதுங்க விசும்பிக்கொண்டே மருத்துவரிடம் கேட்டான். டாக்டர் மாமா! நான் இப்பவே செத்துடுவேனா?

தன் உடலில் இருக்கிற எல்லா ரத்தத்தையும் அக்காவுக்கு கொடுத்ததாய் அந்த அப்பாவிச் சிறுவன் நினைத்து விட்டான். தான் சாகப்போவதாய் உறுதிசெய்துகொண்டு அக்காவுக்காக உயிரையும் கொடுக்க நினைத்த அவனின் அன்பை என்னென்பது!

## திருக்குறள் கதைகள்

# சிட்டுக் குருவியின் அறிவு



*அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது*
*அஞ்சல் அறிவார் தொழில் (குறள்: 426)*

எதற்குப் பயப்பட வேண்டுமோ அதற்குப் பயப்படாமை முட்டாள்தனமாகும். அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுவது அறிவுள்ளவர் செய்கையாகும். வரக்கூடிய கெடுதியை முன்னாலேயே அறிந்து காப்பைச் செய்து கொள்ளும் கெட்டிக்காரருக்கு அவர்களை நடுங்கச் செய்யும்படி உண்டாகும் துன்பமில்லை. அறிவை உடையார் எல்லாம் உடையவராவார். எல்லாம் இருந்தாலும் அறிவற்றவருக்கு எதுவும் இல்லாதது போலத்தான். வரப்போவதைப் புத்தியால் அறிவாளி அறிவார். அறிவற்றவர் அப்படி முன் கூட்டியறிய முடியாது. உலக நடைமுறைக்கேற்ப ஒட்டி வாழ்வதே அறிவாகும். விசித்திரமாக ஏறுக்கு மாறாக நடந்து கொள்ளக்கூடாது. அறிவு உலகத்தோடு தொடர்பு கொள்ளுவது. இந்தத் தொடர்பால் சுருங்குவதும் விரிவதும் இல்லாது ஒரே நிலையில் அறிவு இருப்பது சிறப்பு.

ஒரு குருவி ஒரு மன்னனின் அந்தப்புரத்தில் கூடு கட்டி வசித்து வந்தது. காம்பிலிய நாட்டு மன்னன் பிரும்மதத்தன்தான் அவன். அவனது அரண்மனைத் தோட்டத்தில் வசித்து வந்த குருவிக்குப் பிறர் பேசுவது புரியும். மகாராணி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். குருவியும் ஒரு குஞ்சைப் பொறித்தது.

அந்தச் சிட்டுக்குருவி அரசனிடம் நன்றியுடனிருந்தது. அது அனுதினமும் கடற்கரைச் சோலைக்குச் சென்று இரண்டு கனிகளைக் கொண்டு வரும். ஒன்றை இளவரசனுக்குத் தரும். இன்னொன்றைத் தன் குஞ்சிடம் தரும். இளவரசன் அதை உண்டு நன்கு பருத்திருந்தான்.

பணிப்பெண், குருவி இரை தேடப் போயிருந்த போது இந்த இளவரசனுக்கு அந்தக் குருவிக் குஞ்சைக் காட்டினாள். பல நாட்கள் சென்றன. ஒருவரும் இல்லாத போது இளவரசன் அந்தக் குஞ்சை எடுத்துத் தரையில் அடித்துக் கொன்று விட்டான். அப்புறம் தன் அன்னையிடம் சென்றுவிட்டான். குருவி வந்து தன் குஞ்சுப் பறவை இறந்து கிடந்ததைக் கண்டு பலவாறு கதறித் துடித்தது.

பிறகு இளவரசனே தன் குஞ்சைக் கொன்றவன் என அறிந்து அரசருக்கு நன்றியே இல்லை. நல்ல சொல்லைக் கூறிக் கொண்டே குழி பறிப்பர். பாசமில்லாத அவர்களை நம்பக்கூடாது. கூடப் பிறந்த குருவிக் குஞ்சைக் கொன்ற இளவரசனைப் பழிக்குப் பழி வாங்குவேன் என்று சொல்லிக் கொண்டது.

இளவரசனின் இரண்டு கண்களையும் நகத்தால் கீறிக் குருடாக்கிவிட்டது. வேண்டும் எனச் செய்த பாவம் விளைவாகத் துன்பதே தரும். இளவரசன் குருடாக்கப்பட்டது குருவியால் எனவறிந்த அரசன் அதைப் புரிந்து கொண்டான். அதனிடம் சொன்னான்:

" குருவி உன்மேல் நான் குற்றம் காணவில்லை. உன் குஞ்சைக் கொன்ற என் மகனை நீ குருடாக்கினாய்."

"ஆமாம் அரசனே. இனி ஒரு தடவை குற்றம் நடந்த இடத்தில் தங்குவது அறிவாகாது. நான் வேறு இடம் செல்கிறேன்" என்றது குருவி. குருவியே உனக்குப் பயம் வேண்டாம். உன்னை நான் ஒன்றும் செய்ய மாட்டேன். இங்கேயே இருக்கலாம்.

"வெளிப்படையாகப் பகை இருக்கும் இடத்தில் கூறப்படும் நல்ல வார்த்தைகளில் நம்பிக்கை வைப்பது அறிவீனம். பகை மனத்திலிருந்து முழுதும் போகாது. முதலில் மரியாதை அப்புறம் அவமரியாதையும் உண்டாகும் இடத்தில் தங்குதல் கூடாது. நான் போகிறேன்."

"என்னை, என் சொல்லை நீ நம்பலாம்."

"அறிவு நமக்குத் துன்பமும் அழிவும் வராமல் காக்கும் கருவி. அதனுள்தான் பகைவரும் புகுந்து அழிக்க முடியாது. அறிவே பாதுகாப்பு. மனதை அதன் போக்கில் விடாமல் தீயவழியிலிருந்து திருப்பி நல்ல வழியில் செலுத்துவதே அறிவு. எதை எவர் சொன்ன போதிலும், அப்படியே ஏற்காமல் அதன் உட்பொருளை உணருவதே அறிவாகும். கேட்பவர் மனதில் நன்கு பதியும்படிச் சொல்வதும், பிறர் கூறுவதில் உள்ள நுட்பமான அர்த்தத்தைத் தெரிந்து கொள்ளுவதுமே அறிவு. எனவே, நான் போய் வருகிறேன் மன்னா !" என்று குருவி பறந்து வேறிடம் போய்விட்டது.

அது சரிதானே. குருவி அங்கேயே இருந்தால் தன் குருட்டுப் பிள்ளையைப் பார்க்கும் போதெல்லாம் அரசனுக்குப் பழைய சம்பவம் நினைவில் வராமல் போகுமா ? அரசனின் மனநிலையும் எப்போதும் ஒரே சாந்த நிலையில் இருந்து விடுமா? குருவியின் அறிவு முன் கூட்டியே இதை உணர்ந்து வரப்போகும் ஆபத்தைத் தடுத்துக் கொண்டுவிட்டது.

அட்டைப் பட நாயகன்

# பிரதமர் டோனி பிளேயர்



திரு ரோனி பிளேயர் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் சட்டத்துறைப் பட்டதாரியானவர். தனது எதிர்கால காதல் மனைவியை பரிஸ்டருக்குப் படிக்கும் போது சந்தித்தார். லிவப்பூரில் ஒரு தொழிலாளப் பின்னணியைக் கொண்ட திருமதி செறி பிளேயர் தொழிற்கட்சியின் பிரமுகரும் நடிகருமான திரு ரொனி பூத்தினது மகள். தனது 16வது வயதில் தொழிற் கட்சியின் உறுப்பினரானவர். நாடு முழுமையிலும் பரிஸ்டர் சோதனையில் முதல் மாணவராகத் தேறியவர் செறி. இவரின் உதவியும் திரு ரோனி பிளேயர் பரிஸ்டராவதற்கு காரணம் என்பார்கள். பரீட்சை முடிவில் செறி அன்றைய பிரபலமான பரிஸ்டர் திரு அலெக்ஸாண்டர் அயர்வினது உதவியாளராக இணைகின்றார். ஒருவரை மட்டுமே உதவியாளராகச் சேர்க்கும் வழமைக்கு மாறாக ரோனி பிளேயர் அவர்களையும் உதவியாளராகச் சேர்க்கின்றார். ஒரு சரித்திரத்தின் தொடக்கம் இங்கேதான் உருவாகின்றது.

ரோனி பிளேயர் முதன்முதலில் 1982ம் ஆண்டு இடம்பெற்ற பெக்கன் பீல்ட் இடைத்தேர்தலில் தொழிற்கட்சியின் சார்பாகப் போட்டியிட்டு பெற்ற வாக்குகள் 3886 மட்டுமே. 1983ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ரோனி பிளேயர் செட்ஜ்பீல்ட் தொகுதியில் போட்டியிட்டு 26,801 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். ஆனால் தீவிரமான இடதுசாரிக் கொள்கைகளுடன் தனற் நோர்த் தொகுதியில் போட்டியிட்ட செறி பிளேயர் வெறும் 6,482 வாக்குகள் பெற்று மூன்றாவது இடத்திற்கே வரமுடிந்தது. தனது காதல் கணவரின் அரசியல் எதிர்காலத்திற்காக தனது அபிலாசைகளை ஒருபக்கத்தில் ஒதுக்கிவைத்து அரசியல் தலைவரின் மனைவியாக விளங்கிய அற்புதமானவர் திருமதி செறி பிளேயர்.

1994ம் ஆண்டு மே மாதம் 12ம் திகதி அப்போதய தொழிற் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு ஜோன் சிமித் அவர்கள் மாரடைப்பினால் திடீரென மரணமானதைத் தொடர்ந்து ஏற்பட்ட கட்சித் தேர்தலில் தொழிற் கட்சியின் தலைவரானார். 1997 மே 2ம் திகதி இடம்பெற்ற தேர்தலில் தலைமைதாங்கி தொழிற்கட்சியை சரித்திர வெற்றிகாண வைத்தவர். தொடர்ந்து மூன்றுமுறை தொழிற்கட்சியை வெற்றிபெற வைத்து பத்தாண்டுகள் பிரதமராகச் செயற்படுபவர். சென்ற நூற்றாண்டின் மிக இளம் வயதுப் பிரதமர். நான்கு பிள்ளைகளுக்குத் தந்தை. கடைசி மகன் பிரதமர் இல்லத்திலேயே பிறந்தவர். கட்சியிலும் நாட்டிலும் மிகக் கணிசமான மாற்றங்களைக் கொண்டு வந்தவர்.

தொடர்ந்து பத்தாண்டுகள் பிரதமராக இருந்தபின் பிரித்தானியப் பிரதமர் திரு ரோனி பிளேயர் இம்மாத இறுதியில் ஓய்வு பெறுகின்றார். மிக இளம் வயதில் பிரித்தானியாவின் பிரதமராகவும் கடமைபுரிந்து இளம்வயதிலேயே ஓய்வும் பெறுவதென்பது அபூர்வமானது. இவரின் படத்தை அட்டையில் பிரசுரிப்பதில் தமிழர் தகவல் பெருமை கொள்கின்றது.



# Tony Blair-What will you remember?

by

Senthuran Sivananthasothy



Anthony Charles Lynton Blair, born on 6th May 1953, is the 45th Prime Minister of the United Kingdom. He was the fresh new face of the Labour party, a young leader who was set to change and make Labour and UK politics history.


Tony Blair became the leader of the Labour Party in 1995 beating John Prescott and Margaret Beckett. He came up with the slogan "New Britain New Labour" and in the party's 1997 manifesto promised to improve Education, the economy, a new supreme court and constitutional reform. He even got rid of Clause 4 one of Labour Party's core beliefs. Clause 4 was basically as it stated "...the common ownership of the means of production and exchange." Blair was instantly elected in a landslide victory in the 1997 general elections, especially after more than fourteen years of conservative rule, the last four of which was under John Major who was seen as weak prime minister with a lot of flaws.




Since he was elected in 1997 Mr Blair has successfuly carried out his parties original manifesto. The new supreme court he had promised is bein built as you read this, Scotland and Wales have their parliament/assembly, Britains economy has vastly improved through privatisation and vast amount of money has been pumped into education and the NHS-more than any other government. Blair has also been responsible for the advancements in the peace process in Northern Ireland by being the leading force in the Good Friday peace negotiations so much that the oppositions Sinn Fein and the Democratic Unionist Party (DUP) are working together as one government. And it was Blair that ordered a Task Force to be set up to tackle un-employment within ethnic minority communities like ours. That is what I will remember him by, his push for a better NHS, better education and a new modern Britain with constitutional reforms; but I think his legacy would be shadowed and remembered by millions through something rather ugly.

His decision to go on war with Iraq may have just been the cause for him to be resigning today along with the privatisation of some of the NHS facilities. People lost trust in Blair especially in the last few months as the government revealed that there was never any WMDs in the first place in Iraq for which he apologized. His relationship with George W Bush was also a rather negative one, many people described Blair as Bush's puppy dog listening to whatever he said like Iraq and Afghanistan.

At his pre-resignation speech Blair also said "I done what I thought was best for this country" referring to Iraq, and with that I say I will remember Blair by his strong leadership skills, his ability to make a decision and stick to his guns. So what would you remember him by when he leaves on the 27th of June?



# சைவ நீதி



## சிவனுக்குரிய நவ விரதங்கள்

''பணக்காரனின் இதயம்
பணப்பெட்டியில் பத்திரமாக இருக்கிறது... !''

பெரும்பான்மையான சைவத் திருத்தலங்களில் அதிகாலையில், ''பத்துடையீர் ! ஈசன் பழவடியீர் ! பாங்குடையீர்! புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ ...'' ஓதுவார் அவர்கள் இந்த திருவெம்பாவைப் பாடலைப் பாடுவார்.

'பத்துடையீர்' என்று அடியார்கள் குறிப்பிடப்படு கிறார்கள். அடியார்க்குப் பத்து எது? பத்தில்லாதவர்கள் அதாவது பற்றில்லாதவர்கள்தானே அடியார் ! ஒரு வேளை இந்தப் பத்து வேறா ? சொத்து பத்து என்பார்களே. அந்த மாதிரியான பத்தா ?

அடியார்களுக்கு உலகச் சொத்துக்களும், பத்துக்களும் தகுதிகள் அல்ல. ஆனால் சிவனடியார்க்குச் சொத்துக்கள் பத்து உண்டு. அவை பணமாக இல்லாமல், குணமாக உள்ளவை.

'பத்துகொலாம் அடியார் தம் செய்கை' என்று பாடினார் அப்பர் சுவாமிகள். இப்படிப் பாடிய உடனே அப்பூதி அடிகளின் மூத்த மகனாகிய திருநாவுக்கரசு – பாம்புக்கடியால் நஞ்சு ஏறியவன் – நஞ்சின் வேகம் தணிந்து விழித்தெழுந்தான் என்று பெரியபுராணம் கூறுகிறது.

சிவனடியார்க்கு இருக்க வேண்டிய பத்து குணங்களைப் பாருங்கள் !

1. மணந்தங்கிய திருவெண்ணீற்றையும், ருத்திராட்சத்தையும் அணிதல்

2. ஆசாரியருக்கு வழிபாடு செய்தல்

3. ஆவலுடன் சிவபெருமான் துதிகளைப் பாடுதல்

4. சிவன் நாமங்கள் ஜபித்தல்

5. சிவ விரதங்களைக் காத்து சிவபெருமானுக்கு வழிபாடு செய்தல்

6. சிவ தருமங்களைச் செய்தல்

7 சிவனின் வரலாறுகளை கேட்டல்

8. சிவாலயங்களைப் பாதுகாத்தல்

9. சிவத்தொண்டரிடம் மட்டுமே உணவருந்துதல்

10. சிவத்தொண்டருக்குத் தொண்டராய் இருத்தல்

இவை பத்தும்தான் அடியார்களின் சொத்து. இந்தப் பத்தும் உடையீர் ! அவற்றிற்கு ஏற்ப பாங்குயுடையீர் என்று மணிவாசகர் பாடுகிறார்.

அடியார்க்கு வேண்டிய பத்தில் ஐந்தாவதாக வருவது சிவ விரதம் காத்தல். சிவனடியார்கள் கடைபிடிக்க வேண்டிய சிவ விரதங்கள் மொத்தம் ஒன்பது. அவை: 1. சோமவார விரதம், 2. திருவாதிரை விரதம், 3. உமா மகேசுரர் விரதம், 4. சிவராத்திரி விரதம், 5. கேதார விரதம், 6. கல்யாண சுந்தரர் விரதம், 7. சூல விரதம், 8. இடப விரதம், 9. பிரதோஷ அல்லது ரிஷப விரதம். இவ்வாறு சிவ ரகசிய கண்டம் என்ற நூல் விளக்ககிறது. இனி இவ்விரத வழிபாட்டு முறைகளை விரிவாக காண்போம் !

நம் முன்னோர்கள் நம் வாழ்க்கையில் ஒவ்வொன் றையும் திட்டமிட்டே நடைமுறைப்படுத்தினர். விரதங்களைப் பற்றி முழுமையாக தெரிந்து கொண்டு ஒழுங்காக கடைபிடித்தால் பாவங்கள் நீங்கும். மனப்பக்குவம் ஏற்படும் என்பது ஐதீகம்.

தலயாத்திரையும், தீர்த்த யாத்திரையும் மனிதனுக்கு ஆன்ம ஞானம் ஏற்பட வழி வகுக்கும்.

அதே போல்தான் வழிபாடுகளும் விரதங்களும் மங்களகரமான வாழ்விற்கு ஒரு வழிகாட்டி! ஒவ்வொரு குடும்பத்திலும் இருளைப் போக்கி தூய ஒளி ஏற்றும் அற்புத விளக்கு !

### *1. சோமவார விரதம் :*

''உணவுக்குப் பணம் தேடிப் போகிறோம் !

இறுதியில் பணத்திற்கே உணவாகிப் போகிறோம்... !''

திங்கட்கிழமை சோமவாரம் எனப்படும். கார்த்திகை மாதம் முதல் திங்கட்கிழமையில் ஆரம்பித்து விதிமுறைப்படி செய்தல் வேண்டும். இவ்விரதத்தைப் போல சிவபெருமானுக்குவிருப்பமான விரதம் வேறொன்றும் இல்லை. சந்திரன் இவ்விரதம் இருந்ததாலேயே சிவனின் திருச்சபையில் வீற்றிருக்கும் பேறு பெற்றார்.

விதிமுறை:

நீராடி, நித்திய கருமங்கள் முடித்து சிவபூஜை செய்தபின் ஒரு வேதியரையும், அவர் மனைவியையும் அழைத்து அவர்களைச் சிவனாகவும், உமையாகவும் பாவித்து இயன்றவரைத் தானம் செய்தல் வேண்டும். சிவபூஜை செய்ய வாய்ப்பு இல்லாதவர்கள் ஆலயம் சென்று பஞ்சாமிர்தத்தினால் அபிஷேக அர்ச்சனைகள் செய்து பிராமணர்கட்கும், அடியார்கட்கும் உணவளித்து அன்று முழுவதும் உபவாசம் இருக்க வேண்டும். (உண்ணா நோன்பு) இவ்வாறு விரதம் இருப்பவர்கள் கைலாய பதவி அடைவார்கள். குறிப்பாக ஜாதகத்தில் சந்திர தோஷம் உள்ளவர்கள் இவ்விரதம் இருந்தால் தோஷம் நீங்கும். சந்திர திசை நடக்கும் 10 ஆண்டுகளும் சோமவார விரதம் இருப்பது நன்று. சிவன் கோவில் சென்று செவ்வரளி மலர்களால் அர்ச்சனை செய்ய வேண்டும். நவக்கிரகங்களை வணங்கி சந்திரபகவான் முன் நின்று...

> ''அலைகடல் தனினின்று அன்று வந்து துதித்த போது
> கலைவளர் தடிங்களாகி கடவுளறெவரும் ஏத்தும்
> சிலைநுதல் உளம்பாள் பங்கன் செஞ்சடை பிறையாயமே
> மலைவல மாகவந்த மதியமே போற்றி போற்றி''

என்னும் தோத்திரத்தைப் பாடுதல் வேண்டும்.

### *2. திருவாதிரை விரதம் :*

மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரம் கூடிய பவுர்ணமி அன்று இவ்விரதத்தை மேற்கொள்வது சிறப்பு தரும். ஆடல் வல்லானாகிய நடராஜப் பெருமானுக்கு உகந்த நாள். திருவாதிரை சிவனுக்கும், திருவோணம் நாராயணனுக்கும் விரதம் இருக்க உகந்த நாட்களாகும்.

பன்னிரெண்டு தமிழ் மாதங்களில் சிறந்தது மார்கழி மாதம் ஆகும். பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ''மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்'' என்றார். பாரத யுத்தம் நடந்தது மார்கழியில்தான். இதனைத் தனுர் மாதம் என்றும் அழைப்பர்.

இத்திங்களில் வீடுகளின் வாசல்களைத் தூய்மை செய்து பெரிய பெரிய கோலங்களிட்டு அதில் சாணி மொத்தையின் மேல் பரங்கிப் பூக்களை வைப்பது வழக்கம். அதிகாலையிலேயே நீராடி சிவநாமங்களை ஜபித்து, நம்மால் முடிந்தளவு அடியார்கட்கு உணவளித்து, அருட்பெருஞ்சோதியான சிவனிடம் மனமுருக பிரார்த்தனை செய்து சிறப்பான தூய வாழ்வினை இவ்வுலகிலும் அவ்வுலகிலும் பெறுவோமா ?

### *3. உமா மகேசுரர் விரதம் :*

கார்த்திகை மாதம் பௌர்ணமி அன்று இவ்விரதம் இருக்க வேண்டும். உமாமகேசுரர் மூர்த்தம் மிகவும் சக்தி வாய்ந்ததாகும். எல்லா விரதங்களையும் போல வீட்டினைச் சுத்தம் செய்து மெழுகி கோலமிட்டு ஒரு குறிப்பிட்ட இடத்தில் பொன் அல்லது வெள்ளியால் செய்த உமை, சிவன் திருவுருவங்களைப் பஞ்ச கவ்வியத்தினால் அபிஷேகம் செய்து புது துணி அணிவித்து திரு அமுது படைக்க வேண்டும். தீப தூபங்கள் காட்டி மனமுருக வணங்குதல் வேண்டும். அன்று ஒருபொழுது மட்டுமே உண்ண வேண்டும்.

சிவ ஆலயஞ் சென்று தம் மனதில் கருதிய பொருளை விரும்பி இறைவனைத் தோத்திரம் செய்ய வேண்டும்.

15 கலசங்களில் 15 உமா மகேஸ்வரப் பிரதிமை வைத்து 15 வகையான பண்டங்களைப் படைத்து 15 முடியுள்ள கயிறு தரிக்க வேண்டும். 15 ஆண்டுகள் இவ்விரதம் இருந்தால் சகல போகங்களும் பெற்று முடிவில் மோட்சமும் பெறலாம். மறுநாள் காலையில் கும்பத்தையும், பிம்பத்தையும் முன்போல் வணங்கி அந்தணருக்கு அவற்றைத் தானமாகக் கொடுத்து அடியார்களுடன் திரு அமுது செய்ய வேண்டும். ஆண்டுதோறும் உமாமகேஸ்வர நோன்பினைக் கடைபிடிப்பவர்கட்கு இம்மையில் சகல செல்வங்களும் மறுமையில் முக்தியும் கிட்டும் என்பது சிவத்தின் வாக்கு.

### *4. கேதாரீஸ்வரர் விரதம் :*

பரமசிவனுக்கு கேதாரீஸ்வரர் என்ற திருநாமமும் உண்டு. கேதாரீஸ்வரரை நோக்கி கௌரி செய்த விரதம் ஆதலால் இப்பெயர் பெற்றது.

பிருங்கி என்ற முனிவர், சக்தியை விலக்கி சிவனை மட்டும் வலம் வந்ததைக் கண்டு சக்தி சினந்து,

சிவபிரானில் இடப்பாகம் பெற கௌதம முனிவர் வனத்தில் தவம் இருந்தார். கௌதமர், தேவியை வணங்கி விரதத்தின் மகிமையைக் கூறினார்.

விதிப்படி ஸ்ரீ பார்வதிதேவி ஈசுவரனை நோக்கி விரதமிருந்து பாதி உடம்பை (இடப்பாகம்) பெற்ற நாள் இது. ஈஸ்வரன் அர்த்த நாரீஸ்வரர் ஆன புண்ணிய நாள். இது ஐப்பசி மாதம் கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தித் திதியில் வருகிறது. இந்நாளில் அனுஷ்டிக்கப்படும் விரதமே கேதாரீஸ்வர விரதம் எனப்படுகிறது.

21 இழையிலான காப்பை ஆண்கள் வலக்கையிலும், பெண்கள் இடக்கையிலும் கட்டிக்கொள்ள வேண்டும். பாத்ரபத சுக்லாஷ்டமி முதல் அமாவாசை வரை 20 நாட்களும் சூரியன் மறைந்த பின், ஒருபொழுது மட்டும் உணவு அருந்தி இரவு தருப்பையில் உறங்க வேண்டும். இறுதி நாளான சதுர்த்தி அன்று கலசம் வைத்து பூஜை செய்து கேதார நாதரை வணங்கி உபவாசம் இருக்க வேண்டும். மறுநாள் உதயத்தில் பாராணம் பண்ண வேண்டும்.

இவ்விரதத்தின் மகிமையை அளவிட்டுக் கூற இயலாது. இவ்விரதம் இருப்பவர்களின் வறுமைகள் ஒழிந்து செல்வம் பெருகும். நினைத்தது எல்லாம் ஈடேறும்.

### 5. கல்யாண சுந்தரர் விரதம்:

இவ்விரதம் பங்குனி உத்திரத்தன்று விரத முறைகளை மேற்கொள்ளப்படும். இவ்விரத காலங்களில் ஒருபொழுது மட்டும் உணவு கொண்டு சிவனின் நாமாவளிகளை பாராணம் செய்தல் வேண்டும்.

### 6. சூல விரதம்

சூலாயுதம் தரித்த சிவபெருமானுக்காக இவ்விரதத்தை தை அமாவாசையன்று இருக்க வேண்டும். ஒரு பொழுது மட்டும் பகல் உணவு அருந்தலாம். இரவு உபவாசம் இருக்க வேண்டும்.

### 7. இடப விரதம்.

இடபாரூடராகிய சிவபெருமானுக்கு இவ்விரதம் வைகாசி சுக்கல பட்சம் அஷ்டமி அன்று மேற்கொள்ளப்படும். இவ்விரதத்திலும் ஒரு பொழுது பகல் உணவு மட்டும் அருந்தலாம்.

### 8. மஹா சிவராத்திரி விரதம்:

"கோபத்தை விட பொறுமையில்
ஒருவன் அதிகம் சாதிக்கிறான்...!"

சிவனுக்குரிய ராத்திரி சிவராத்திரியாகும். சிவராத்திரி, நவராத்திரி என்னும் இரு பண்டிகைகள் மட்டுமே ராத்திரி என்னும் அடைமொழியில் உள்ளது. இதில் ஒன்று சிவனுக்கும் மற்றது சக்திக்கும் உரியதாகும். நித்திய சிவராத்திரி, பக்ஷ சிவராத்திரி, மாசி சிவராத்திரி, யோக சிவராத்திரி, மகா சிவராத்திரி என ஐவகைப்படும். வைஷ்ணவர்கள் கூட இவ்விரதத்தை மேற்கொள்ள வேண்டும் என கருட புராணம் கூறுகிற பொழுது இவ்விரதத்தின் சிறப்புகளை நாம் நன்றாக உணர முடியும்.

இவற்றில் மாதம் தோறும் வருவது மாத சிவராத்திரி ஆகும். மாதந்தோறும் கிருஷ்ணபட்ச சதுர்த்தியில் வரக்கூடியது நித்திய சிவராத்திரி. சோமவாரத்தன்று பகல், இரவு ஆகிய இரு பொழுதுகளிலும் அமாவாசையாக இருந்தால் அது யோக சிவராத்திரி ஆகும். ஆண்டு தோறும் மாசி மாதத்தில் கிருஷ்ண பட்ச சிவராத்திரிதான் மகா சிவராத்திரியாகும்.

புராணங்களில் சிவராத்திரி தத்துவம் :

ஒரு சமயம் பிரம்மா, விஷ்ணு இருவருக்கும் தங்களில் யார் பெரியவர்? என்ற போட்டி ஏற்பட்டது. இருவருக்குமே 'தான்' என்ற மமதை தோன்றியது. ஆணவ இருள் ஏற்பட்டது. இதனால் தேவாதி தேவர்கள் அஞ்சி நடுங்கினார்கள், பயந்தனர், சிவனிடம் சென்று முறையிட்டனர். இவர்களின் வேண்டுதலை ஏற்று சிவபெருமான் அவர்களைக் காக்க லிங்கமாக முளைத்து ஒளி வடிவமாக தோன்றினார். தேவர்கள் சிவனை போற்றி வணங்கினார்கள். இவ்வாறு சிவன் ஒளி வடிவமாக தோன்றிய காலமே சிவராத்திரி என்று அழைக்கப்பட்டது.

ஒரு முறை பார்வதி தேவி விளையாட்டாக சிவபெருமானின் கண்களை மூடினார். இதனால் உலகம் முழுவதும் இருளில் மூழ்கியது. இதனால் அச்சம் அடைந்த தேவர்கள் இரவு முழுவதும் சிவபெருமானை வணங்கினார்கள். இவ்வாறு வணங்கிய இரவு காலமே சிவராத்திரி எனவும் வழங்கப்படுகிறது.

தேவர்களும், அசுரர்களும் பாற்கடலை கடைந்த பொழுது அதிலிருந்து முதலில் வெளிவந்த ஆலகால விஷத்தை சிவன் உட்கொண்டார். விஷத்தின் வீரியத் தன்மையினால் சிவனுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்க தேவர்கள் இரவு முழுவதும் சிவபெருமானை வணங்கினார்கள். இதுவே சிவராத்திரி எனவும் வழங்கப்படுகிறது.

சிவராத்திரி விரதம் கடைபிடிக்கும் முறைகள்

மகா சிவராத்திரிக்கு முதல் நாள் ஒரே ஒரு வேளை மட்டும் உணவு உண்ண வேண்டும். தூய ஆடை உடுத்தி தூய்மையோடு சிவபெருமானை வழிபட வேண்டும். இன்று இரவு நல்ல சிந்தனையோடு

உறங்க வேண்டும். மறுநாள் அதிகாலையில் எழுந்து, நல்ல நீரில் குளித்து, சூரிய உதயத்திற்கு முன்பே சிவசிந்தனையோடு கோயிலுக்கு சென்று சிவனை வணங்குதல் வேண்டும். பகல் முழுவதும் உணவு எதுவும் உண்ணாமல் இறைவனையே நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். இரவிலும் குளிக்க வேண்டும். இரவில் நான்கு கால பூஜை அமைத்து சிறப்பாக வழிபட வேண்டும். இரவு முழுவதும் பஞ்சாட்சர ஜெபம் செய்ய வேண்டும். சிவராத்திரி யன்று ஒரு பஞ்சாட்சரம் உச்சரித்தால் ஏனைய நாட்களில் நூறு பஞ்சாட்சரம் ஜெபித்த பலன் கிட்டும்.

சந்தனம், புனுகு, கஸ்தூரி, ஜவ்வாது, அகில், பச்சை கற்பூரம், குங்குமப்பூ ஆகியவற்றால் அபிஷேகம் சிவனுக்கு செய்தால் பலன் கூடும் என்பது நம்பிக்கை. வெண்பொங்கல், வடை, அன்னம், தோசை போன்ற வற்றை கடவுளுக்கு படைக்க வேண்டும். சிவனுக்கு உகந்தது வில்வம். ஒவ்வாதது தாழம்பூ, ஊமத்தை, எருக்கலம் போன்றவை சிவனுக்கு பிடிக்காதது.

சிவராத்திரி விரதத்தை முறைப்படி மேற் கொண்டால் சிவனடியார்களுக்கு எல்லா நன்மைகளையும் தந்து துன்பங்களிலிருந்து பக்தர்களை காத்தருள்வார்.

சிவராத்திரி விரதம் இருப்பவர்கள் கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. அதாவது நான்காவது யாமத்தில் சிவ பூஜை செய்து முடித்த பின், விடியற்காலை நீராடிய பிறகு, தான் மட்டும் தனித்து உண்ணுதல் கூடாது. அடியார்களுக்கு அன்னமிட்டு அவர்களுடனேயே உண்ண வேண்டும்.

சிவராத்திரி வழிபாட்டின் பயன்:

சிவராத்திரியன்று சிவபெருமானும், பார்வதியம்மையும் ஒரு வில்வ மரத்தடியில் அமர்ந்திருந்தார்களாம். அம்மரத்தின் மீது ஒரு குரங்கு இருந்தது.

அந்தக் குரங்கு ஒவ்வொரு வில்வ இலையாகப் பறித்து உமையம்மை உடனிருந்த உலகண்ணலாகிய சிவபெருமானின் மீது போட்டுக் கொண்டிருந்ததாம். நோக்கம் ஒன்றும் இல்லாவிட்டாலும் சிவராத்திரி யன்று வில்வார்ச்சனை செய்த காரணத்தால் அந்தக் குரங்கை ஆண்டவன் மூவுலகையாளும் முசுகுந்தச் சக்கரவர்த்தியாகப் பிறப்பிக்கச் செய்து அருளினாராம். இதை வள்ளலார்,

''வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையை

செல்வத் துரைமகனாய்ச் செய்தனையே''

என்று பாடி உருகினார்.

அது மட்டுமல்ல. பெருச்சாளிகளுக்குப் பிடித்த இடம் கோயில். அப்படி ஒரு சிவன் கோவிலில் சிவராத்திரியன்று வழிபாடு ஆர்ப்பாட்டமாகச் செய்வார்கள். வழக்கமாக விளக்கெண்ணெய் ஊற்றி விளக்கேற்றுவார்கள். அன்று சிவராத்திரியானதால் நல்ல பசு நெய்யைத் தாராளமாக விட்டு விளக்கேற்றினார்கள்.

நள்ளிரவைத் தாண்டியதும் குருக்கள் கோயில் கதவை சாத்திவிட்டுச் சென்று விட்டார். இப்போது கோயிலுக்குள் இருந்த பெருச்சாளிக்குக் கொண்டாட்டம். சிந்திச் சிதறியிருந்த பிரசாதத் துணுக்குகளை எல்லாம் வேட்டையாடியது. விளக்கில் ஊற்றி இருந்த நெய்யின் வாசனை பெருச்சாளியின் மூக்கைத் துளைத்தது. அந்த நேரம் விளக்கின் திரி எரிந்து சிறிது மங்கலான சுடர் ஆயிற்று. நெய்யின் சுவையை உணர வந்த எலியின் மூக்கில் திரியின் சுடர் பட்டு சுட்டுவிட்டது. எலி வேகமாக மூக்கைத் திருப்பித் தாவி ஓடியது. அதில் எலியின் மூக்கு பட்டு திரி தூண்டிக் கொள்ள, விளக்கின் சுடர் பிரகாசம் ஆயிற்று.

சிவராத்திரியன்று கோயிலில் அறியாமல் தூண்டினாலும் விளக்கைப் பிரகாசம் செய்த காரணத்தால் அந்த எலியை அடுத்தப் பிறவியில் மூவுலகும் ஆளும் மகாபலிச் சக்கரவர்த்தியாக ஆக்கினாராம் சிவபெருமான்.

இவ்வாறு சிவராத்திரி அன்று சிவரகசிய காண்டமும், அருணாசலப் புராணமும் கூறிய இவ்வழிமுறைகளை முழுமையாக உள்வாங்கி, விரத முறைகளை மேற்கொண்டு சிவபெருமானின் பரிபூரண அருள் பெற்று இந்த ஜென்மப் பிறவியை வழிநடத்துவோம் !

### *9. பிரதோஷ விரதம் :*

''நண்பர்களுக்கு புன்னகை கொடுங்கள்

எதிரிகளுக்கு பூக்கள் கொடுங்கள்''

### *10. பிரதோஷ வரலாறு :*

தேவர்கள் நரை, திரை, மூப்பு, மரணம் போன்ற துன்பங்கள் இன்றி வாழ விரும்பினார்கள். இவையனைத்தும் தம்மை அணுகாமல் வாழ்வதற்கு சிவமூர்த்தியை வேண்டியிருந்தால் ஒரு சொல்லால் அருளியிருப்பான். இந்தச் சுருக்கமான நெறியை அறியாத தேவர்கள் பிரம்ம தேவனிடம் சென்று தங்கள் கருத்துக்களை முறையிட்டனர்.

பிரம்ம தேவர் என்ன செய்தார் தெரியுமா? தேவர்களுடன் திருமாலிடம் சென்று ''சாவா மூவா நலம் பெற என்ன வழி?'' என்று வினவினார்.

திருமாலும், ''திருப்பாற் கடலை கடைந்து அமிர்தம் உண்டால் எப்போதும் இளைமையுடன் வாழலாம்!'' என்று ஆலோசனை கூறினார். இந்திராதி தேவர்கள், திருப்பாற்கடலை அடைந்து, மந்திர கிரியை

மத்தாகவும், வாசுகி என்ற நாகராஜனைத் தாம்புக் கயிறாகவும் அமைத்து பாற்கடலைக் கடைய முயன்றார்கள். திருமால் கூர்மமாகி, மந்திர கிரியைத் தம் முதுகில் தாங்கினார்.

அசுரர்கள் வாசுகியின் தலைப்புறமும், தேவர்கள் வால்புறமும் நின்று கடையலானார்கள். அந்த நாள் தசமி திதி. மறுநாள் ஏகாதசி பதினோராவது நாள்.

பாற்கடலைக் கடையும்பொழுது, வாசுகி வருத்தம் தாங்காமல் பதைபதைத்து நஞ்சை உமிழ்ந்தது; கடலிலிருந்தும் நஞ்சு தோன்றியது. வாசுகி கக்கிய ஆலமும் (விஷம்), கடலில் தோன்றிய ஆலமும் ஒன்று சேர்ந்து ஆலாலம் என்று பெயர் பெற்றது.

இந்த ஆலாலம் மிக்க பயங்கரமான வெப்பத்துடன் உலகத்துக்கே முடிவு செய்வது போல் விண்ணவரை விரட்டிட, வலமாகவும், இடமாகவும் மறித்துத் துரத்தியது. திசை தோறும் தேவர்கள் நடுங்கி ஒடுங்கி ஓடினார்கள்.

வெண்ணிறமாக இருந்த திருமால் விஷவேகத்தால் நீலநிறம் ஆனார். வானவர்கள் அஞ்சித் திருக் கயிலாயம் சென்று அரனாரிடம் அடைக்கலம் புகுந்து...

''தேவ! தேவ! மகா தேவா! அருட் பெருங்கடலே! கருணைக் குன்றே! தேவரீர் ஆண்டான், நாங்கள் அடிமைகள். நாங்கள் பாற்கடல் கடைந்தோம். அந்த விவசாயத்தில் முதலில் விளைந்தது தேவரீருக்கு உரியது!'' என்று கூறி முறையிட்டார்கள்.

கருணையே உருவான எம்பெருமான் சிவன்,தமது அருகிலிருந்த சுந்தரரைப் பார்த்து (நந்தி தேவர்) ''சுந்தரா! அவ்விடத்தை இவ்விடத்திற்கு கொண்டு வா!'' என்று பணித்தருளினார். சுந்தரரும், எவராலும் நெருங்க முடியாத அதிபயங்கரமான கொடிய விஷத்தை நாவல்பழம் போலத் திரட்டி உருட்டிக் கொணர்ந்தார்.

இறைவனும், தேவர்களுக்காகவும், ஏனைய ஜீவராசிகளுக்காகவும் அந்தக் கொடிய விஷத்தை அமுதம் போல உண்டார். அந்த விஷம் உள்ளே சென்றால் உள் முகத்தில் உள்ள ஆருயிர்கள் அழிந்து விடும். ஆதலால் உண்ணாமலும், உமிழாமலும் கண்டத்தில் தரித்தருளினார். அதனால் எம்மானுடைய செம்மேனி கண்டங்கரியதாக ஆயிற்று. அது காரணமாக அவர் நீலகண்டர் என்று பெயர் பெற்றார்.

மீண்டும் பாற்கடல் கடைந்தது:

சிவபெருமான் தேவர்களை நோக்கி மீண்டும் சென்று முன்பு போலவே திருப்பாற்கடலைக் கடையுமாறு பணித்தருளினார். தேவர்களும் கடலைக் கடையத் தொடங்கினார்கள்.

பாற்கடலிலிருந்து லக்ஷ்மி, ஐராவதம், காமதேனு, கற்பகத்தரு, சிந்தாமணி, கௌஸ்துபமணி, சூடாமணி, உச்சைச்ரவம் என்ற குதிரை முதலியன ஒவ்வொன்றாகத் தோன்றின. லக்ஷ்மியை திருமால் ஏற்றுக்கொண்டார். ஏனைய பொருள்களை இந்திராதி தேவர்கள் அடைந்தார்கள்.

ஏகாதசியாகிய அன்று இரவு முழுவதும் அவர்கள் உறக்கமின்றிப் பாற்கடலைக் கடைந்தார்கள். மறுநாள் அதிகாலையில் துவாசதியன்று அமிர்தம் தோன்றியது. அதனைத் தேவர்கள் பகிர்ந்து உண்டு மகிழ்ந்தார்கள்.

பிரதோஷ காலம்:

பிரதோஷ காலத்தை ஐந்து வகையாகப் பிரித்துள்ளனர். சூரியன் அஸ்தமனம் அடையும் நேரத்தில் ஒன்றரை மணியும் இரவு தொடங்குவதற்கு முன் ஒன்றரை மணி நேரமும் ஆகிய மூன்று மணி நேரமும் பிரதோஷ கால கட்டமாகும். இது நித்திய பிரதோஷ காலமாகும்.

மாதப் பிரதோஷ காலம்:

இது பிரதிமாதமும் வளர்பிறை திரதோயதசி தினத்தன்று வரும் பிரதோஷ நேரத்தையும், தேய்பிறை திரயோதசி தினத்தன்று வரும் பிரதோஷ நேரத்தையும் குறிக்கும்.

உத்தம மஹாப் பிரதோஷம்:

சிவபெருமான் விஷமருந்திய தினம் சனிக்கிழமையாகும். சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் வளர்பிறையில் சனிக் கிழமையில் திரயோதசி திதி அன்று வரும் பிரதோஷம் உத்தம மஹா பிரதோஷம் ஆகும். இது மிகவும் சிறப்பும், கீர்த்தியும் பெற்ற தினமாகும்.

மத்திம மஹா பிரதோஷம்:

சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் தேய்பிறை திரயோதசியுடன் ஆன சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷ காலங்கள் மத்திய மஹா பிரதோஷங்கள் என அழைக்கப்படுகின்றன.

அதம மஹா பிரதோஷம்:

ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகிய மாதங்களில் வரும் வளர்பிறை மற்றும் தேய்பிறை திரயோதசியுடன் கூடிய சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷங்கள் அதம மஹா பிரதோஷங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

ப்ர - மிகவும் அதிகமான

தோஷம் - தீங்கு

பிரதோஷம் என்பது வடமொழிச் சொல், தீங்கு விளைவிக்கும் நேரமென்பதும் இதன் பொருள். இந்த நேரத்தில்தான் சிவபெருமான் விஷமருந்தினார். எனவே, அந்த நேரத்தில் சிவனை வழிபடுவது அனைவர்க்கும் உகந்தது. தோஷங்கள் அனைத்தும் அகலும்.

தொடரும்

VidaHealth

**VidaHealth** provides a range of healthcare and wellbeing services that are rapidly becoming part of everyday life. Whether it is recent injuries, ongoing health problems or for people needing some expert pampering - our goal is to leave you looking and feeling healthier!

located at:
**Inspire Health Club**
**tel: 020 8697 4766**

### Healthcare Services

VidaHealth provides both osteopathy, physiotherapy and podiatry, as well as sports rehabilitation therapy. Being perfectly placed in Inspire Health Club, we work closely with the personal trainers to ensure a speedy recovery.

### Wellbeing Services

VidaHealth is proud to be able to provide a range of massage therapies, including sports massage, holistic massage, pregnancy massage, baby massage courses and hydrotherm massage (on a bed of warm water). Complimenting these are an extensive range of beauty therapies - our beauty therapists specialise in certified organic facial and body treatments.

### VidaHealth Therapists

All our therapists are fully qualified, dedicated and most importantly are passionate about their work. They are highly professional and continually developing and learning new skills and techniques. All of this enables VidaHealth to provide not only an excellent service to the local community but also a comprehensive source of advice and help.

**we are located at Inspire Health Club, 415-421 Bromely Road, Bromley, Kent, BR1 4PJ**
**tel: 020 8697 4766 fax: 020 8697 4866 email: info@vidahealth.net www.vidahealth.net**

VidaHealth
located at:
Inspire Health Club
tel: 020 8697 4766

## Massage Therapy Introductory Offer

This voucher entitles the holder to 40% off a treatment of their choice
*(please note, this does not apply to baby massage courses)*

All booking must be made in advance, quoting reference number VH100
- please present this voucher at reception on arrival

This offer expires on 30th June 2007

*Only one treatment per person*

*Subject to availability*

# மருந்தாகும் உணவுகள்

முற்காலத் தாய்மார்கள் கை வைத்தியம் என்ற பெயரால் வீட்டிலிருந்த அஞ்சறைப் பெட்டியிலுள்ள கடுகு, மிளகு, சீரகம், பூண்டு, வெந்தயம் மற்றும் உப்பு, புளி, அரிசி போன்றவற்றாலும் வீட்டைச் சுற்றியிருக்கும் புல், பூண்டு, செடி, கொடிகளாலும் எளிய உடல் பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்த்துக் கொண்டனர். மறந்து மறைந்து வரும் இவ்வெளிய முறைகளை நினைவு கொள்வோமாக

உழைப்புக்கு ஏற்ற உணவு

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி உணின்*

என்பது அய்யன் திருவள்ளுவர் வாக்கு.

நாம் உண்ணும் உணவு உடலை வளர்க்கிறது. நோயைப் போக்குகிறது. நோய் வராமல் தடுக்கும் எதிர்ப்புச் சக்தியை அளிக்கிறது. ஆயினும் நாம் உண்ணும் உணவின் அளவு, தரம், பக்குவம் ஆகியவை யாவருக்கும் ஒரே மாதிரி அமைவதில்லை.

உதாரணமாக தினமும் உண்ணக்கூடிய கிழங்கு வகையில் மிகவும் சிறந்தது கருணைக்கிழங்காகும். ஆயினும் சிலருக்கு இது ஒவ்வாமையை உண்டாக்கி விடுகிறது.

உணவு உடலுக்குத் தக்கவாறு மாறுபடும்.

சில சத்துக்கள் வயதானவர்களுக்கு எடுபடுவ தில்லை. வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் என்ன பயன் என்ற முதுமொழிப்படி வெம்மை பொருந்திய காயமாகிய உடல் சுக்குபோல் உலர்ந்த வயதானவர் உடல் உரம் பெற வேண்டி வெந்த அயம் என்னும் இரும்பு செந்தூரம் உண்பதால் ஒரு பயனும் ஏற்படுவதில்லை. எனவே,

உணவு வயதுக்கு தக்கவாறு மாறுபடும்

ஒருவேளை உண்பான் யோகி, இருவேளை உண்பான் போகி, மூன்று வேளை உண்பவன் ரோகி என்று கூறி இருந்தாலும் இது நோயாளிகளுக்கும், ஆரோக்கியம் குறைந்தவர்களுக்கும், குழந்தை களுக்கும் பொருந்தாது. உதாரணமாக வயிற்றுப்புண் இருப்பவர்கள், மதுமேக நோயாளிகள் இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை உண்ண வேண்டியுள்ளது. மேலும் கடின உழைப்பாளிகள், கர்ப்பிணிகள், சத்துமிக்க உணவை அதிக அளவில் உண்ண வேண்டி உள்ளது.

உணவு உழைப்பிற்கு தக்கவாறு மாறுபடும்

பொதுவாக காலையில் இளவரசன் போலவும், பகலில் மகாராஜன் போலவும், இரவில் கருமி போலவும் உணவு உட்கொள்ள வேண்டும். அதாவது காலை உணவு மிகவும் சத்து உள்ளதாகவும், பகல் உணவு பல வகையாகவும், இரவு உணவு மிக எளிமையாகவும் இருத்தல் வேண்டும் என்பது விதி.

உணவை நன்கு மென்று சுவைத்து உண்ண வேண்டும். நொறுங்கத் தின்பவன் நூறாண்டு வாழ்வான் என்பது பழமொழி. வயிறு புடைக்க உண்ணாமல் குறைவாகத் தின்று நிறைவாக வாழவேண்டும்.

## ஐந்தறைப் பெட்டி

சமையலுக்கு உறுதுணையாக உள்ள பொருள்களில் மிக முக்கியமானது நம்வீட்டுச் சமையல் அறையில் ஐந்தறைப் பெட்டியில் குடிகொண்டிருக்கும் கடுகு, மிளகு, சீரகம், வெந்தயம், மிளகாய்வற்றல் ஆகியவை. இவற்றின் நோய் தீர்க்கும் பண்பு மிகச் சிறந்தது.

## கடுகு

கடுகை பொதுவாக நாம் தாளிப்பதற்கு பயன்படுத்துகிறோம். இது ஜீரணத்திற்கு துணை நிற்கிறது. ஒரு பிடி கடுகை சுத்தமான நீரில் அரைத்து 3 லிட்டர் நீரில் கலந்து கொதிக்கவைத்து இறக்கவும். இந்நீரை ஒரு பேசினில் ஊற்றி பொறுக்கும்படியான சூட்டில் இருகால் பாதங்களையும் அதில் படும்படியாக 10 நிமிடம் வைத்திருக்கவும். இதனால் தூக்கமின்மை, மனச்சோர்வு, பயம், படபடப்பு, சித்தப்பிரமை, அரட்டல், புரட்டல், மனக்குழப்பம் முதலியன நீங்கும்.

## மிளகு

நாம் பயன்படுத்தும் மசாலாப் பொருட்களில் மிக மிகப் பழமையானதும் முதன்மையானதும் மிளகாகும்.

பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம் என்பது பழமொழி.

இது நாம் உண்ணும் உணவில் உள்ள நச்சுத்தன்மையை மாற்றிவிடும் கால் டீஸ்பூன் மிளகுத்தூளை (வறுத்து அரைத்தது) 1 டம்ளர் மோருடன் கலந்துக் குடிக்க வாயுத்தொல்லை, வயிறு உப்பிசம், செரியாமை முதலியன நீங்கும். மிளகு, சீரகம் இரண்டையும் சேர்த்தும் பயன்படுத்தலாம்.

சீதளத்தினால் உண்டான சாதாரண காய்ச்சலுக்கு 6 மிளகை 1 டம்ளர் நீரில் போட்டுக்

கொதிக்க வைத்து பாதியாய் சுண்டியபின் குடிக்க காய்ச்சல் குறையும்.

ஆறு மிளகும், 4 பாதாம்பருப்பும் சாப்பிட்டு, 1 டம்ளர் பால் அருந்திவர நரம்புகள் வலுப்பெரும்.

மிளகையும், கல்லுப்பையும் சேர்த்து தூளாக்கி பற்களின் மேல்தடவ பல்லீறு ரணம், பல்வலி, ஈறுகளில் இரத்தம் வடிதல், பற்கூச்சம் போன்ற வற்றிற்கு பயன்படுத்தி வர சிறந்த பலன் கிட்டும்.

## சீரகம்

*சிறு குழந்தை இல்லாத வீடும்*
*சீரகம் இல்லாத உணவும் சிறக்காது*

என்பது பழமொழி

சீரகத்தை வாயில் அடக்க குமட்டல், வாய்கசப்பு, தலைச்சுற்றல் நீங்குவதுடன் பசி ஏற்படும்.

1 டீஸ்பூன் சீரகத்தை 1 டம்ளர் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி ஆறவைத்து இத்துடன் கொத்தமல்லிக் கீரையின் சாறு 1 டீஸ்பூன், சிறிதளவு உப்பு சேர்த்து தினம் காலை, இரவு உணவுக்கு பின் அருந்திவர வயிறு உப்புசம், செரியாமை, வாந்தி, பேதி, நீங்கி சீரண சக்தி அதிகரிக்கும். சாதாரணமாய் நாம் குடிக்கும் நீரிலேயே சிறிதளவு சீரகத்தை போட்டு சிறிது நேரம் கொதிக்க வைத்துக் குடிக்கலாம். இது சாதாரண காய்ச்சல், சளி, இருமல், பித்த உபரி முதலிய அனைத்திற்கும் சிறந்தது. இந்நீரிலேயே சிறிதளவு சுக்குபோட்டு காய்ச்சிக் குடிக்க தொண்டைப்புண் நீங்கும்.

கருவுற்றப் பெண்கள் மேற்சொன்ன சீரக கஷாயத்தையே தேன் கலந்த பாலுடன் சேர்த்து தினம் ஒரு வேளை அருந்திவர கரு நன்கு வளரும். பிரசவம் சுலபமாகும். தாய்ப்பால் பெருகும்.

## கருஞ்சீரகம்

இரு நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும். 30 கிராம் கருஞ்சீரகம் வறுத்தது, 30 கிராம் வறுக்காதது. இவை இரண்டையும் கலந்து தூளாக்கி வைத்துக் கொண்டு இதில் 3 கிராம் அளவு எடுத்து நீருடன் உண்டுவர மூல உபாதை குறையும். மேலும் இது நரம்பு மண்டலத்தை பற்றிய நோய்களையும் தீர்க்கும்.

## வெந்தயம்

வெந்தயம் வாய்முதல் மலவாய் வரை ஏற்படும் புண்களை ஆற்ற வல்லது. வெந்தயத்துடன் சம அளவு கடுக்காய்ப்பூ சேர்த்து இடித்து சூரணித்து வைத்துக் கொள்ளவும். வேளைக்கு அரை டீஸ்பூன் வீதம் உணவுக்கு முன்பு தினம் 2 (அ) 3 வேளை சாப்பிட்டு நீர் அருந்திவர வாய்ப்புண், வயிற்றெரிச்சல், சீதபேதி, மூலம் குணமாகும்.

பொன்வறுவலாக வறுத்த வெந்தயம் 50 கிராம். கறி மஞ்சள் 50 கிராம். நெல்லிவற்றல் 50 கிராம் இவற்றை சூரணித்து வைத்துக் கொள்ளவும். காலை 6.00 மணி, மாலை 6.00 மணி வேளைக்கு அரை டீஸ்பூன் சாப்பிட்டு நீர் அருந்தி வர சர்க்கரை நோய் என்னும் மதுமேகம் கட்டுப்படும். எல்லாவித சத்துக்களும் ஒருங்கே உள்ளது (வெந்த+அயம்) வெந்தயம்

ஒரு டீஸ்பூன் வெந்தயத்தை வறுத்து சிறிது உப்பும் சோம்பும் சேர்த்தரைத்து உள்ளுக்குக் கொடுத்து வர வயிற்றுப் போக்கு நிற்கும்.

சமையலில் துணை நிற்பவை

## புளி

இதை ரசத்தில் சேர்ப்பதால் பூண்டு, மிளகாய், உப்பு இவற்றின் வேகத்தை கட்டுப்படுத்தும். உணவில் அளவோடு சேர்க்க சீரண சக்தி அளிக்கும்.

மதுவினால் ஏற்பட்ட பித்த வெறிக்கு புளியைக் கரைத்து உள்ளுக்குக் கொடுக்க குணமாகும். சாதாரண பித்த வாந்தியும் நிற்கும். புளி அதிகமாகச் சேர்ப்பதினால் நரை, திரை விரைவில் உண்டாகும்.

வெப்ப நாடான ஆப்பிரிக்காவை தாயகமாக கொண்ட புளி சீரண சக்தியை அதிகரிக்கும், மலத்தை இளக்கும். புதிய புளியை விட பழைய புளியே கொஞ்சம் நல்லது. தேள்கடி விஷத்திற்கு சிறிது புளியையும், சுண்ணாம்பையும் சேர்த்து பிசைந்து கடிவாயில் வைக்க விஷமிறங்கும்.

இளம்பச்சை நிறமுள்ள புளியங்கொழுந்து இலைகளை பறித்து பாசிப்பருப்புடன் சேர்த்து கடைந்து சாப்பிடஉடலுக்கு பலமுண்டாகும். இதையே பச்சையாக சாப்பிடக் கண்களை பற்றிய நோய்கள் நீங்கும். உடலுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள ரணங்கள் ஆற்றும்.

புளியமரத்தின் பூ, கொழுந்து முதலியவற்றை சிறிதளவு புளியும், காரமும் சேர்த்து துவையல் செய்து இரவு அன்னத்துடன் சாப்பிட பித்த நோய்கள் நீங்கும்.

## இஞ்சி

இஞ்சியதனுக் கிருமலைய மோக்காளம்
வஞ்சிக்கு சந்திசுரம் வன்பேதி – விஞ்சுகின்ற
குலையறும் வாதம்போந் தூண்டாத தீபனமாம்
வேலையுறுங் கண்ணாய்! விளம்பு

– என்பது சித்தர் வாக்கு

ஒரு துண்டு இஞ்சியை தோலை நீக்கி நசுக்கி ஒரு குவளை பாலில் போட்டு காய்ச்சி வடிகட்டி சிறிது பனஞ்சர்க்கரை சேர்த்து அருந்திவர மேற்சொன்ன பாடலில் சொன்ன குணம் யாவும் தெரியும்.

சிலர் இஞ்சிச் சாறுடன் தேன் சேர்த்து காலை நேரத்தில் வெறும் வயிற்றில் சாப்பிடும் வழக்கம் உள்ளது. இதனால் தலை சுற்றல், வாந்தி நீங்கும். ஆயினும் தொடர்ந்து மாதக் கணக்கில் சாப்பிட்டால் அதிக பசி ஏற்பட்டு தொல்லை தரும். எனவே மூன்று முதல் ஐந்து நாட்கள் அருந்தினால் போதுமானது.

காலை இஞ்சி கடும்பகல் சுக்கு மாலை கடுக்காய் உண்டு வந்தால் என்றும் இளமையோடு இருக்கலாம் என்பது சித்தர் வாக்கு. ஆயினும் இதை எப்படி கடைபிடிப்பது என்பதை அறியார்கள்.

1. இஞ்சியை தினமும் காலையில் சிறிது ஏலக்காய் சேர்த்து நசுக்கி பாலுடன் சர்க்கரை சேர்த்து காப்பிபோல் தயார்செய்து அருந்தி வரலாம்.

2. சுக்கை குழம்புடன் சேர்த்தும் அல்லது பொட்டுக் கடலை, தேங்காய், சுக்கு சேர்த்து அரைத்து துவையல் செய்து பகலில் உணவுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

3. கடுக்காயை விதை நீக்கி புளித்த மோரில் ஊறவைத்து உப்பு சேர்த்து ஊறுகாய்போல் இரவு உணவுடன் சேர்த்து வரலாம்.

இஞ்சி ஒரு சிறு துண்டு வாயில் அடக்கிக் கொள்ள தாகம் அடங்கும். இஞ்சிசாறு அரை டேபிள்ஸ்பூன் எலுமிச்சை + புதினா சாறு 1 டேபிள்ஸ்பூன் இவற்றை 1 டேபிள்ஸ்பூன் தேன் கலந்து தினம் 3 வேளை சாப்பிட அஜீரணம் வாந்தி, வயிறு உப்புசம், மஞ்சள் காமாலை, அசைவ உணவு மற்றும் அதிக எண்ணை உணவு சாப்பிடுவதால் ஏற்படும் தொல்லைகள் நீங்கும்.

## இளநீர்

வழுக்கை இல்லாத இளநீரை பகல் உணவுக்குப் பிறகு அருந்துவதால் உண்ட உணவு எளிதில் சீரணமாவதுடன், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். பெரும்பாலானோர் காலையில் வெறும் வயிற்றில் இளநீர் அருந்துவர் இது தவறு. இவர்களுக்கு சிறிது நாளில் பசிகுறைந்து குன்மம் என்ற வயிற்றுநோய் ஏற்படும். உணவுக்குப் பின் இளநீர் அருந்துவது அமிர்தத்திற்கு ஒப்பாகும்.

இது கண்களுக்கு பிரகாசத்தைக் கொடுக்கும். இளநீரை சிறிது தேன் கலந்து சாப்பிட மலச்சிக்கல், மூலநோய்கள் நீங்கும். இளநீரை தொடர்ந்து முகத்தில் தடவி வர அம்மைத் தழும்புகள் மறையும்.

## பூண்டு

பூண்டை அதிக அளவில் சமையலில் சேர்த்து வந்தால் மூலநோய் குணமாகும். வயிற்றிலுள்ள புழுக்கலைக் கொல்லும். வாயுவை கண்டிக்கும்.

ஐந்து அல்லது ஆறு பூண்டுப் பல்லை ஒரு குவளை பசும்பாலில் சேர்த்து வேகவைத்து கடைந்து சிறிது சர்க்கரை சேர்த்து காலையில் வெறும்வயிற்றில் சாப்பிட்டுவர சீதபேதி, குடற்புண் ஆகியவை தீரும். இதையே இரவு நேரம் படுக்கும்முன் அருந்திவர மூலநோய், கிராணி குணமாகும்

## கறிமஞ்சள்

நாம் சமையலுக்கு பயன்படுத்தும் மஞ்சளினால் ஜலதோஷம், தலைவலி, கடிவிஷம் நீங்குவதுடன் பசியை அதிகப்படுத்தும்.

மஞ்சளையும் நெல்லி வற்றலையும் சமனளவு எடுத்து சூரணமாக்கி காலை மாலை 1 டீஸ்பூன் சாப்பிட்டுவர சர்க்கரை நோய் கட்டுப்படும். அனைத்தவித சரும வியாதிகளுக்கும் குஷ்டத்திற்கும் கூட மேற்கண்ட சூரணம் மிகவும் சிறந்ததாகும்.

1 டீஸ்பூன் மஞ்சள் தூளை கொதிக்கின்ற பாலிலோ அல்லது நீரிலோ போட்டு சிறிதளவு சர்க்கரை அல்லது தேன் கலந்து தினமும் இருவேளை வெறும் வயிற்றில் குடித்தவர கபம், இருமல், சளி, ஆஸ்த்துமா தொல்லைகள் நீங்கும். கால் டீஸ்பூன் மஞ்சள் தூளை மோர் அல்லது நீரில் கலந்து குடிக்க தீவிரமான வயிற்றுப்போக்கு குறையும். மஞ்சளை வேப்பிலையுடன் சேர்த்தரைத்து சேற்றுப் புண்ணுக்குப் போட புண் ஆறும்.

## தனியா

கொத்துமல்லி விலையை தனியா என்பர். மிளகாய் வற்றலுடன் இதை சமமாகச் சேர்த்து அரைத்து பயன்படுத்துவர். இதனால் மிளகாயின் வெப்ப குணம் தணியும். தனியாவினால் விக்கல், நாவறட்சி, உட்சூடு, குமட்டல் குணமாகும். இது ஜீரண உறுப்புகளுக்கு சிறந்தது.

சகலவித வயிற்றுப்புண் குணமாவதுடன் ஜீரண உறுப்புகளுக்கு வலுதருவது தனியா ஆகும். இதைக்கொண்டு கீழ்கண்ட எளியமுறையில் மருந்து தயார் செய்து வைத்துக்கொள்வது யாவருக்கும் நலம் பயக்கும்.

வறுத்த தனியா இரண்டு பங்கு, அசல் சந்தத்தூள் ஒரு பங்கு. நெல்லிக்காய் வற்றல் ஒரு பங்கு. இவற்றை சூரணித்து வைத்துக் கொள்ளவும். உணவுக்கு முன் தினம் மூன்று வேளை, வேளைக்கு அரை டீஸ்பூன் வீதம் சாப்பிட்டு நீர் அருந்தி வர, பெரும் ஏப்பம், மார்பு வலி, வாய்நீர் ஊறல், எரிச்சல், நெஞ்செரிச்சல் தீரும்.

இரண்டு டீஸ்பூன் தனியாவை ஒன்றிரண்டாய் இடித்து 1 டம்ளர் தண்ணீரில் போட்டு அரை டம்ளராக கொதிக்க வைத்து இறக்கவும். இதை ஆறியபின் வடிகட்டி சர்க்கரை சேர்த்து அருந்தலாம். பாலுடன்

சேர்த்தும் குடிக்கலாம். இதனால் இரத்தத்திலுள்ள அதிக கொழுப்பு சத்து குறையும். இருதயம் வலுப்பெறும். சிறுநீரகம் நன்கு செயல்படும். உஷ்ணம் தணியும் இன்னும் அசீரண பேதி, இரத்த பேதி, பித்த மயக்கம் தீரும்

## கசகசா

கசகசாவை உண்ணும் உணவு வகைகளில் சேர்த்து சமைத்துண்ண நீர் சுருக்கு, நீர் எரிச்சல், இரத்தமூலம், சீதபேதி, தூக்கமின்மை நீங்கும். இதை பச்சைப் பயறுடன் சேர்த்து அரைத்து உடம்பில் பூசி அரைமணிநேரம் கழித்து குளிக்க தேகம் பளபளக்கும். இரத்தம் கெடுவதினால் சருமத்தில் ஏற்பட்ட தினவு நீங்கும்.

கசகசாவினால் ஆசனத்தில் ஏற்படும் கிருமியினால் உண்டாகும் நமைச்சல், சீத ரத்தக் கழிச்சல், ஜலதோஷம் முதலியவை நீங்கும். நல்ல தூக்கம் உண்டாகும்.






நன்றி : வீரகேசரி

## தமிழர் தகவல்

இலண்டன்

P. Uma Mahalingam
119, Eliot Bank
London SE23 3XD
27.05.2007

அன்புள்ள பதிப்பாசிரியர் அவர்களுக்கு



தமிழர் தகவல் மே மாத இதழை வாசித்துவிட்டேன். இது 'தீபம்' தொலைக்காட்சியில் வரும் கேள்விக்கான பதில். வருகிற இதழோடு நான்கு வருடங்களை பூர்த்தி செய்யும் தங்கள் முயற்சி பாராட்டுக்குரியது. அழகிய முகப்புகளுடன், அற்புதமான உள்ளடக்கத்துடன் இதுவரை காலமும் வெளிவந்த சஞ்சிகைகளை தவறவிடாமல் வாசிக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தமைக்கு வாசகர்கள் சார்பில் நன்றி. தொடர்ந்தும் பல்லாண்டு காலம் பதிவு பெற தங்களுக்கும், தங்களைச் சார்ந்தவர்களுக்கும், உறுதுணையாக உதவுபவர்களுக்கும் எமது இதயம் கனிந்த வாழ்த்துக்கள். ஈழத்துக் கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் முகமாக மூத்த ஊடகவியலாளரான திருமதி யோகா தில்லைநாதன் அவர்களின் நிழற்படத்தை அட்டையில் அலங்கரித்து வைத்து, ஊரின் வாசனையை உலகறிய செய்தமைக்கு நன்றி. கலை உணர்வுள்ள ஈழத்து மக்கள், கலைஞர்கள் எங்கிருந்தாலும் அவர்களைத் தேடிப்பிடித்து ஊக்குவிப்பதில் எவருக்கும் சளைத்தவரல்ல. அந்த வரிசையில் யோகா தில்லைநாதன் அவர்களின் ''இளம் கானக்குயில்'' தெரிவு, பதினைந்து ஆண்டுகள் வரை நீடித்துள்ளது. அவர்களுடைய உழைப்பும், உணர்ச்சியுமேயாகும். பதினைந்தாவது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற '' தமிழர் தகவல்'' வாசகர்கள் சார்பில் வாழ்த்துகிறோம்.

கனடா பதிப்பான ''தமிழர் தகவல்'' விளம்பரமான ''நாம் இருவர் நமக்கு மூவர்'' மறுபதிப்பு கண்டு மகிழ்ந்தேன். இதே சிந்தனையை 06.10.2006ல் ''ஒரு பேப்பரில்'' வெளிவந்த ''வாழ வழிவகுப்போம்'' என்ற தலையங்கத்துடன் நான் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதியைத் தர ஆசைப்படுகிறேன்.

''இரண்டாவது உலகப்போரில் இழந்த மனிதவளத்தை ஈடுசெய்ய ஐரோப்பிய நாடுகள் கடைபிடித்த இனப்பெருக்க வழிமுறைகளை ஈழத்தமிழினம் பின்பற்ற தயங்கக்கூடாது என முற்போக்கு அறிஞர்கள் சிந்திப்பதை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்''.

நான் அன்று எழுதிய கருத்தை ஆமோதிக்கும் செயலாக கனடாவிலிருந்து வரும் ''தமிழர் தகவல்'' கருமமாற்றுவதற்கு எமது நன்றி.

வணக்கம்.



# ஆனி மாதப்பலன் (ஜுன் 15 - ஜுலை 15)

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாதரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465

**மேடம்** பகுத்தறிவாளர்களே! இழுபறியாக இருந்த வேலைகள் உடனே முடியும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். பணவரவு அதிகரிக்கும். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேர்வீர்கள். குழந்தை பாக்கியம் கிட்டும். உடன் பிறந்தவர்கள் உதவுவார்கள். கல்யாணம் முடியும். வேலை கிடைக்கும். சொத்துப் பிரச்னை தீரும். வியாபாரத்தில் அதிரடி லாபம் உண்டு. பங்குதாரர்கள் உதவுவார்கள். உத்யோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். லாட்டரி மூலம் பணம் வரும். வெற்றி பெறும் மாதமிது.

**இடபம்** தன்மானச் சிங்கங்களே! உங்கள் ராசிநாதன் கொஞ்சம் பலவீனமாக இருப்பதால் உடல் நலத்தில் கவனம் செலுத்துங்கள். மனைவியுடன் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. சகோதரர் உதவுவார். வாகனம் வாங்குவீர்கள். அரசு விவகாரங்களில் எச்சரிக்கையாக இருங்கள். திருமணச் சிக்கல் தீரும். வியாபாரத்தில் மாதப் பிற்பகுதியில் லாபம் அதிகரிக்கும். புது சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். உத்யோகத்தில் உயரதிகாரிகளை அனுசரித்துப் போங்கள். கலைத்திறன் கூடும். பிள்ளைகள் மதிப்பார்கள். போராட்டங்களுக்கிடையே சாதிக்கும் மாதமிது.

**மிதுனம்** சதா சிந்திப்பவர்களே! லாப வீட்டில் செவ்வாய் நிற்பதால் மனோபலம் கூடும். சகோதர ஒற்றுமை ஓங்கும். சொத்துப் பிரச்னை தீரும். புதிய சொத்துக்கள் வாங்குவீர்கள். சுக்ரன் சனியுடன் இருப்பதால் ஏழரைச் சனியால் ஏற்படும். பாதிப்புகள் விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் லாபம் அதிகமாகும். வேலையாட்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புது ஒப்பந்தம் வரும். வயிற்றுவலி, கனவுத்தொல்லை, தூக்கமின்மை வந்து போகும். உத்யோகத்தில் மதிப்பு கூடும். திடீர் முன்னேற்றங்கள் தரும் மாதமிது.

**கடகம்** கருணையாளர்களே! ராசியிலேயே சனியும், எட்டாவது வீட்டிலே ராகுவும் நின்று கொண்டு உங்களை சிரமப்படுத்தினாலும் யோகாதிபதி செவ்வாய் தன் சொந்த வீட்டில் ஆட்சி பெற்றிருப்பதால் நீண்ட நாளாக தள்ளிப்போன காரியங்கள் உடனே முடியும். ஆடை. ஆபரணம் சேரும். தலை சுற்றல், வயிற்றுவலி நீங்கும். பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் கடையை விரிவு படுத்துவீர்கள். புது ஒப்பந்தங்கள் தேடி வரும். உத்யோகத்தில் எதிர்பாராத உதவிகள் உயர் அதிகாரிகளிடமிருந்து கிடைக்கும்.

**சிம்மம்** புன்னகையாளர்களே! உங்கள் ராசியிலேயே கேது நின்று கொண்டு உங்களுக்கு உடல், மன வருத்தங்களை ஒரு புறம் தந்தாலும் உங்கள் ராசிநாதன் சூரியன் லாப வீட்டில் நிற்பதால் உற்சாகம் பிறக்கும். கணவன் மனைவிக்குள் இருந்த சச்சரவு நீங்கும். பிள்ளைகளின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு. நவீன மின்னணு, மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில்; போட்டிகள் குறையும். புது தொடர்புகள் கிடைக்கும். உத்யோகத்தில் இழந்த சலுகைகள் கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும் மாதமிது.

**கன்னி** கலகலப்பாகப் பேசுபவர்களே! பத்தாவது வீட்டில்; சூரியன் பிரகாசமாக இருப்பதால் உங்களின் நீண்டகால எண்ணங்கள் நிறைவேறும். பிரபலங்கள் உதவுவார்கள். வழக்கில்வெற்றி கிடைக்கும். எதிர்பாராத பணவரவு உண்டு. எட்டாவது வீட்டில் செவ்வாய் நிற்பதால் பயணத்தின்போது கவனம் தேவை. வீண் செலவுகளும், வாக்குவாதங்களும் வந்து போகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். புது பங்குராரர்களை சேர்ப்பீர்கள். உத்யோகத்தில் புது வாய்ப்புகள் கிடைக்கும. அதிரடி முன்னேற்றம் தரும் மாதமிது.

**துலாம்** கடின உழைப்பாளர்களே! உங்கள் ராசியை செவ்வாய் பார்ப்பதால் அதிரடி முடிவுகள் எடுப்பீர்கள். சகோதர வகையில் நல்லது நடக்கும். புதன் இந்த மாதப் பிற்பகுதியில் வலுவடைவதால் அதிலிருந்து பணப்புழக்கம் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். கல்யாண முயற்சிகள் விரைந்து முடியும். வியாபாரத்தில் மாதப் பிற்பகுதி வரை நிதானம் தேவை. உத்யோகத்தில் அதிகாரிகளின் கோபம் தணியும். இழந்த சலுகையை பெறுவீர்கள். வேற்று மதத்தினர் உதவுவார்கள். போராடி சாதிக்கும் மாதமிது.


**விருச்சிகம்** விவேகிகளே! உங்கள் ராசிநாதன் ஆட்சி பெற்றிருப்பதால் தடுமாற்றம் நீங்கும். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். உங்கள் வார்த்தையை எல்லோரும் மதிப்பார்கள். வேலை கிடைக்கும். கால்வலி, முதுகு வலி நீங்கும். சொத்து வாங்குவது, விற்பது லாபகரமாக முடியும். வியாபாரத்தில் புது வியூகங்கள் அமைப்பீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருந்த சலிப்பு, வேலைச்சுமை நீங்கும். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். வாகனம் வாங்குவீர்கள். தோல்வியிலிருந்து விடுபடும் மாதமிது.

**தனுசு** தயாள மனசுக்காரர்களே! எட்டில் நிற்கும் வெள்ளி; சனியின் கெடுபலனைக் குறைப்பதுடன் உங்களின் அணுகுமுறையை மாற்றுவார். மறதி, மந்தம் நீங்கும். எதிர்பாராத பணவரவு உண்டு. ஆடை, ஆபரணம் சேரும். கொஞ்சம் உடல் நலனில் கவனம் செலுத்துங்கள். வியாபாரத்தில் ஓரளவு லாபம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். வாகனத் தொந்தரவு நீங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி பொங்கும். தியாகத்தால் வெற்றி பெறும் மாதமிது.

**மகரம்** மனிதருள் மாணிக்கங்களே! ஆறில் நிற்கும் சூரியனால் அதிரடி முடிவுகள் எடுப்பீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். எதிர்ப்புகள் நீங்கும். சோர்வு, அலைச்சல் குறையும். உற்சாகம் பொங்கும். பிரபலங்கள் உதவுவார்கள். ஆடை, ஆபரணம் சேரும். தாம்பத்யம் இனிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். தாய்வழி உறவினர்களால் செலவுகள் இருக்கும். வியபாரத்தில் புது யுக்திகளைக் கையாளுவீர்கள். பற்றுவரவு உயரும். வீடு, மனை விவகாரம் லாபத்தில் முடியும். உத்யோகத்தில் உயர் அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். மகிழ்ச்சி தரும் மாதமிது.

**கும்பம்** கொள்கைவாதிகளே! மூன்றில் நிற்கும் செவ்வாயால் முடங்கியிருந்த வேலைகள் முழுமையாக முடியும். பணவரவு அதிகரிக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும். ஐந்தில் நிற்கும் சூரியனாலும் ஆறில் நிற்கும் வெள்ளியாலும் அடிக்கடி முன்கோபமும், அலைச்சலும், செலவும் அதிகரிக்கும். குடும்ப ரகசியங்களை வெளியிட வேண்டாம். வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். போட்டிகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் அதிகாரிகளிடம் வளைந்து போவது நல்லது. வாகனத்தில் கவனம் தேவை. சகிப்புத் தன்மை தேவைப்படும் மாதமிது.

**மீனம்** மேதாவிகளே! தனத்தில் நிற்கும் செவ்வாயாலும், பஞ்சமத்தில் நிற்கும் வெள்ளியாலும் உங்களின் புத்திசாலித்தனம் வெளிப்படும். பழைய கடன் தீரும். எதிர்பாராத பணவரவு லாட்டரியில் உண்டு. ஆடை, ஆபரணம் சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். ஏற்றுமதி, இறக்குமதி வகைகள் லாபம் தரும். உத்யோகத்தில் பதவி உயர்வு உண்டு. புது வாய்ப்புகள் தேடி வரும்.பிள்ளைகளின் பிடிவாத குணம் நீங்கும். உல்லாசப் பயணங்கள் உண்டு. எதிலும் வெற்றி பெறும் மாதமிது.


Tharani
Jewellery
54 Ealing Road
Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777


டாக்டர் டி.வீ. பழனிவேல் FDSRCS (England)
J.L Vara Dental Practice
290 High Street North Manor Park, London E12 6SA
ஈஸ்ட்ஹாம் ஸ்டேசனில் இருந்து ஐந்து நிமிட நடை
இழந்த பற்களை தாடை எலும்புகளில் இம்பிளான்ற்
(Implant) மூலம் மீளவும் கட்டி எழுப்புதல்
பல்வலியை பல் அகச்சிகிச்சை
(Endonotic Therapy) மூலம் நிற்பாட்டுதல்
முரசு இரத்தம் வருதலை நிற்பாட்டல்
ஆட்டம் கண்ட பற்களை Splint Therapy மூலம் வலிமையாக்குதல்
கிளிப் அல்லது பிறேஸ் (Orthodontic) சிகிச்சை மூலம்
விகாரமான பற்கை அழகான வரிசைக்கு ஒழுங்குபடுத்தல்
மஞ்சள் நிறமான பற்களை பால்போன்ற வெண்மையாக மாற்றுதல்
பல் முரசு சம்பந்தமான சகல சத்திர சிகிச்சைகள்
புன்னகை அழகை மேம்படுத்த (Cosmetic Dental Treatment)
பிறைவேட் பல் ஒழுங்குபடுத்தல் சிகிச்சை
11 வயது சிறுவர் முதல் 55 வயது வந்தோர் உட்பட
FELLOW IN DENTAL SURGERY OF
THE ROYAL COLLEGE OF SURGEONS OF ENGLAND
Tel : 020 8552 1626




## Rasies Saloon & Beauty Parlour

தமிழில் பேசி நீங்கள் விரும்பியபடி
சிகை அலங்காரம் செய்து கொள்ளலாம்.

தொடர்புகட்கும் பதிவு செய்து கொள்வதற்கும்

Tel : 020 8692 5552
Mob : 07743 757 920
32 Loampit Hill, Lewisham
London SE 13 7SW

தென்கிழக்கு லண்டன் வாழ் மக்களின் நீண்ட நாள் ஆசையைப் பூர்த்திசெய்துள்ளது ராசி சலூன். உங்கள் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய தமிழ் நாட்டிலிருந்து சிகை அலங்கார நிபுணர்கள் வருகை தந்துள்ளார்கள்.

Wedding Makeup
Bridal Makeup,
Evning Makeup
Waxing, Nails,
Threading
Bleaching
Henna
Herbal Facing,
Mehendi
Oil Massage






## PRIME FOOD & WINE

News Papers & Magazines
Off Licence - Grocery
Asian & Sri Lankan Groceries
Fruits & Vegetables

**118, Tooting High Street**
**London SW 17 ORR**
**Tel : 020 8682 3777**



மணங்கவரும்
மளிகைச்சாமான்கள்
மென்பானங்கள்
மதுபான வகைகள்
பழங்கள்
மரக்கறி வகைகள்
மீன், இறைச்சி
என எல்லாவற்றிற்கும்
குறைந்த விலையில்
நிறைந்த
சேவையைப் பெற
எம்மை நாடுங்கள்

வெம்பிளியில்
இன உணர்வான
மளிகை கடை

## Malar Supermarket

**543- High Road, Wembley**
**Middlesex, Hao 2 DJ**
**Tel : 020 8795 5797**

உங்கள் சகல
தேவைகளையும்
பூர்த்தி செய்கிறது

24 மணி நேர சேவையில்
ஒரு மளிகை கடை

Ayngaran
ஸ்தாபனத்தாரின் அங்கீகரிக்கப்பட்ட
மலர்
சூப்பர் மார்க்கெட்

இந்த இடத்தில்
உங்கள்
விளம்பரம்
இடம்பெற
பவுண் 35
மட்டுமே


AYNGARAN
AYNGARAN
International
Ayngaran Video - Tooting
30 High Street
Collierswood
Tooting SW 19 2AB
Tel : 020 8540 1500
சிவாஜி
திரைப்பட
விநியோகத்தர்
சிறந்த புதிய சினிமா
படங்களின்
Original CDக்கும் DVDக்கும்
Ayngaran கிளை Easthamலும் உண்டு
ஜுன் 15 முதல்
20 தியேட்டர்களில் சிவாஜி திரைப்படம்
காண்பிக்கப்பட உள்ளது




ESTD 1992
SRIKANTH & CO.
Solicitors & Property Business Centre
Solicitors & Estate Agents
Property Sales, Letting & Conveyancing
Under One Roof
We also practise in the following areas of LAW:
Immigration
Wills & Probate
Conveyancing - Residential
Conveyancing - Commercial
Londlord & Tenant
Liquor Licensing
Matrimonial / Family
Employment Matter
Consumer Problems
Civil Litigation
Housing Matters
Welfare Matters
557 High Road, Wembley, Middlesex HA0 2DW
Tel : 020 8795 0648
Fax : 020 8795 0649 / Mob : 07831 195 979




லண்டனில்
பொற்கை
வண்ணர்களின்
நிர்வாகத்தில்
இயங்கும்
ஒரே நகை மாடம்
MIERRA
Jewellery Mart
Gems & Jewellery
34 London Road Tooting London SW 17 9HP
Tel : 020 8648 7750 Mobile : 07958948685
www.meera_jewellery.com




CHANDRA
Super Market &
Off Licence
COST CUTTER
உங்களுக்குத் தேவையான சகல விதமான மளிகைப் பொருட்கள்,
இலங்கையிலும், இந்தியாவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
உணவுப்பொருட்கள், கடல் உணவு வகைகள், மரக்கறி வகைகள்,
பழ வகைகள், மேல்நாட்டு குடிவகைகளுடன் இலங்கை பியர்
வகைகளையும் சகாய விலையில் பெற்றுக்கொள்ள ஒரே இடம்.
ஆடியோ, வீடியோ, சீ.டி, வி.சீ.டி ஆகியவற்றை விற்பனைக்கும்
வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.
Tel : 020 8333 8680
209 - 211 Bromley Road
Catford, London SE6 2PG

மாபெரும்
கழிவு
விற்பனை
JK Gold House &
Fashion House
314-316 London Road
Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577
Fax : 022 8684 4677




மக்கள்



## தமிழர் தகவலின் எண்ணம் நிறைவேறுகிறது








கேளிக்கைகளுக்காகவே தொலைக்காட்சிகள் என்றாகிப்போன தமிழ் நாட்டில் ஒரு நல்ல மாற்றமாக மக்கள் தொலைக்காட்சி என்னும் புதுமை அண்மையில் நடைபெற்றுள்ளது. செப்டம்பர் 6-ஆம் தேதி தொடங்கப்பெற்றுள்ள இத் தொலைக்காட்சி மக்களுக்கு அறிவூட்டும் வகையிலும், விழிப்புணர்வூட்டும் வகையிலும் நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது. தேவாரம், திருவாசகம், அருட்பா முதலிய பாடல்கள், தமிழ்த்தேனருவி என்னும் தலைப்பில் தினமும் காலையிலும், மாலையிலும் பண்ணோடு இசைந்து பாடப்படுகின்றன. வில்லும், சொல்லும் என்னும் தலைப்பில் தினமும் ஒரு திருக்குறள் வில்லிசைப்பாட்டாக வெளிப்படுகின்றது. திரைப்படங்களோ, திரைப்படப் பாடல்களோ இத்தொலைக்காட்சியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த தொலைக்காட்சியை பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்தவர் இராமதாசு தொடங்கியுள்ளார். இந்த வழியை இலண்டன் தொலைக்காட்சிகள் பின்பற்றுமா? **இது அக்டோபர் 2006 இதழில் வெளிவந்த செய்தி.**

தமிழர் தகவலின் எண்ணம் இவ்வளவு விரைவில் நிறைவேறும் என்று எதிர்பார்க்கவில்லை. தரிசனம் தொலைக்காட்சியில் மக்கள் டி.வி.யின் பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகிறது. முக்கியமாக சைவ மக்களுக்கான தேவாரம் பாடப்படுவது மனதைக் குளிரச் செய்கிறது.

பதிப்பாசிரியர்




**Address for screenings of tamil movie Malligai Vasam:**

9th June Saturday 2007 @ 6pm
White House
Southend Road
Eastham E6 2AA

10th June Sunday 2007 @ 7pm
Merton Hall
78 Kingston Road
London SW19 1LA

15th June Friday 2007 @ 8.30pm
Barnet Multi-Community Centre
Algernoon
NW4 3TA

ஆஸ்திரேலியா சென்ற போது நான் பார்த்த படம். நம்மவர் தயாரிப்பில் வெளிவந்துள்ளது. பார்க்கலாம்

பதிப்பாசிரியர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
03.06.1930



ஆண்டவன் அடியில்
26.06.2006

**அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி (திரவியம்)**

(இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர், உணவுத் திணைக்களம், கொழும்பு)

திதி 15.06.2006

ஆண்டுதான் ஒன்றாகி விட்டதப்பா அருகில் நீங்கள் இல்லாது
அன்பையும், அரவணைப்பையும் அள்ளித்தர உங்களைப் போல் யார் வருவார் இனிமேலப்பா
ஆறுதல் சொன்னீரே அன்று வந்து அல்லல்பட்ட ஆழிதாண்டிய - நம்மினத்தவர்க்கு
ஆண்டுதான் ஆனாலும் ஆறுமா எம்நெஞ்சம்

உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
அன்பு மனைவி : இராசபூபதி கந்தசாமி
சகோதர்கள் : திரு சின்னையா (கனடா)
திரு பொன்னுத்துரை (லண்டன்)
பிள்ளைகள் : ஜெயகௌரி சோதீஸ்வரன் (லண்டன்)
ஆனந்தகௌரி நந்தகுமார் (கனடா)
சாந்தகௌரி விமலநாதன் (கனடா)
ஜெயக்குமார் கந்தசாமி (கனடா)
மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர்,
மைத்துனிமார், பெருமக்கள்



**Anthoorium**

*World of Designs*

Jewellery & Textiles

For your Jewels, Gems, Sarees, Costumes, Musical Instruments & Gift Items please visit us...

வைரத்தாலிக்கொடி அத்துடன் பழைய தங்கத்தில் புதிய நகைகள் செய்து கொள்ள நாடுங்கள்... இத்துடன் வாத்தியக்கருவிகளும் விற்பனைக்கு உண்டு



102, B Burlington Road
New Malden, Surrey KT3 4NT
Tel : 020 8942 8001
Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales@anthoorium.co.uk

**EVEREST**

Curry King

24 Loampit Hall
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233

Breakfast
Lunch Dinner



Sea Food &
Vegetarian Specialist

புதிய பொலிவுடன் லூசியத்தில்

**கற்பகம்**

**KATPAGAM**

ஞாயிறு தோறும் உடன் பங்கு ஆட்டிறைச்சி
சகலவிதமான
மரக்கறி வகைகள் பழவகைகள் உட்பட
சகல தேவைகளுக்கும்
நாடவேண்டிய ஒரே இடம்

துரிதப் பணமாற்றுச் சேவை
ரஞ்சன்
இலண்டன்



36, Loampit Hill
Lewisham
London SE 13 7SW
Tel / Fax : 020 8694 8810

**GJ Video Club**

TAMIL, HINDI, TELUGU, SINGALA
VHS VCD & DVD WHOLESALE & RETAIL

Tel : 020 8471 6500

விடியோ மாபெரும்
கிருஸ்துமஸ்
மலிவு
விற்பனை

ஒன்று வாங்கினால்
மற்றது 1/2 விலை

By One get
One 1/2 Rate

317, High Street North
ManorPark London E12 6SL

**home2u**



ESTATE AGENTS LEWISHAM
Formally known as
Shelter 4U

sales
lettings &
property management
mortgages

வீடுகள் வாங்க, விற்க, சிறந்த
பராமரிப்போடு வீடு வாடகைக்கு விட அணுகுங்கள்
வீடு வாங்க வசதிகள் செய்து தரப்படும்

K. Vinotharan B.Eng.
Director
83 Ladywell Road
Lewisham
London SE13 7JA

Tel : 020 8690 5000
Mob : 07949 026 917
Fax : 020 8314 1111
info@home2u.co.uk
vino@shelor4u.co.uk
www.home2u.co.uk

புதிய நிர்வாகத்தின் கீழ்

**Maharasie Jewellers**

மங்கையரின் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
நவநாகரீக நகைகளின்
தங்கச் சுரங்கம்

122 Loampit Vale
Lewisham
London SE13 7SN
Tel : 020 8691 8888



**Video Audio**

14 Lompait Hill
Lewisham
London SE13


Tamil, Malayalam, Hindi,
Telugu Films, Tele Drama
Devotional Carnatic,
Classical Cd's
Tamil Magazines,
News Papers, Phone Cards




Goldmaa
Goldmaa
கோல்டுமா
கோதுமை ஆட்டா
Wheat Flour
1Kg
Goldmaa
கோல்டுமா
ஒடியல் மா
Odiyal Flour
1Kg
Goldmaa
கோல்டுமா
அவித்த கோதுமை மா
Steamed Wheat Flour
1Kg
Goldmaa
கோல்டுமா
குரக்கன் மா
KURAKKAN FLOUR
1Kg
Goldmaa
கோல்டுமா
வெல்லம்
1Kg
Goldmaa
கோல்டுமா
Rice Flour
1Kg
மிகவும் மலிவான விலையில்
ஐரோப்பிய தமிழ் மக்களுக்காக
விரைவில்

இலண்டனில் தரமான தங்கத்திற்கு

LAKSHMIS
Jewellers



276 High Street North
London E12 6SA UK
Tel : 020 8470 5600
Fax : 020 8470 3448

பிரமாண்டமாய் !
பிரமாண்டமாய் !

Vaani
Cash & Carry

விரைவில்

தயாரிப்பாளரிடம் இருந்து நேரடியாக
வாடிக்கையாளருக்கு

# Arthy Jewellers

ஆயிரங்காலத்துப் பயிருக்கு
ஆண்டாண்டு பாரம்பரியம்
உள்ள தங்க நகைகள்

294 High Street North
Eastham London E12 6SA
Tel : 020 8552 1080

*திங்கள் அன்று விடுமுறை*



# ஜெனா சிற்பக் கலைக்கூடம்
# JENA HANDICRAFT

S. Jeyakanthan
Proprietor

Tel : 011 - 2522956 / Fax : 011 - 2527820
Factory : 284-285 Modera Street Colombo - 15 Sri Lanka
Residence : 265 Modera Street Colombo - 15 Sri Lanka

**ஜனா சிற்பக் கலைக்கூடம்**

இலண்டன் மாநகரில் உள்ள அநேகமான இந்து ஆலயங்களுக்கு சித்திரத் தேர்களை அமைத்துப் புகழ் பெற்ற நிறுவனம். இலங்கை யிலிருந்து சர்வதேச ரீதியில் விதம் விதமான அலங்காரங்களில் முத்து மணவறைகளை ஏற்றுமதி செய்து புகழ்பெற்ற நிறுவனம்.

இலங்கையில் புகழ்பெற்ற இந்து ஆலயங்களுக்கு முப்பதுக்கும் மேற்பட்ட சித்திரத் தேர்களை அமைத்துப் புகழ் பெற்ற நிறுவனம். வரலாற்றுப் புகழ்பெற்ற செல்வச் சந்நிதி முருகனுக்கும், காரை நகர் ஈழத்துச் சிதம்பரத்துக்கும் நிகரில்லாத சித்திரத் தேர்களை அமைத்து பெருமைகளை தனதாக்கிக் கொண்ட நிறுவனம். தற்போது இலண்டன் மாநகரிலும் தனது கிளையை ஆரம்பித்துள்ளது.

**ஆலய நிர்மாணம்**

விதம் விதமான அலங்காரங்களில் (Design) விதம் விதமான அமைப்புகளில் முத்து மணவறைகள்.

கலையம்சத்துடன் கூடிய பூஜை மேடைகளின் கண்கவர் அணிவகுப்பு.

(Design Doors) வேலைப்பாடுகளுடன் கூடிய வீட்டுக் கதவுகள்.

புதிதாக Party Service ஆரம்பிக்க விரும்புபவர்களுக்கு விசேட விலைச் சலுகைகளும், இலவச ஆலோசனைகளும்.



தொடர்புகளுக்கு
S.ஜெயகாந்தன்
0203 - 2260011　　078 - 7802 7534
Email : sjeyakanthan@hotmail.com